கல்யாண, முகூர்த்தப்
பட்டுப் புடைவைகளுக்கு
கைராசியான இடம்

இளவரசி
சேலைச் சோலை

57, சிறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி-9729]

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

பட்டுச் சேலைகளின்
சோலையாகத்
திகழும் ஒரே இடம்!

இளவரசி
சேலைச் சோலை

57, சிறப்பு அங்காடி,
(உள்ளகம்)
யாழ்ப்பாணம்.
[சி-9729]

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 09 திங்கட்கிழமை (23 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 57

# வடபகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான வேலைகளை உடன் ஆரம்பிக்க உத்தரவு!

## அமைச்சர் அனுருத்த விடுத்தார்

கொழும்பு, ஜனவரி 23

வடபகுதிக்கு மின் விநியோகத்தை வழங்குவதற்கான வேலைகள் நேற்று ஞாயிறு முதல் ஆரம்பிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

நீர்ப்பாசன மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சரும்,பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்தை இது சம்பந்தமான உத்தரவை அதிகாரிகளுக்கு விடுத்திருக்கிறார்.

மின்சார சபையின் தலைவர் திரு. லெஸ்லி ஹேரத் மற்றும் மின்சாரப் பகுதியின் பொது முகாமையாளர், சக்திப்பிறப்பாக்கல் பகுதியின் பிரதி முகாமையாளர் ஆகியோருக்கு இது தொடர்பான பணிப்புரையை அமைச்சர் விடுத்திருக்கிறார் என அறிவிக்கப்பட்டது

இதேவேளை— மின் விநியோக வேலைத் திட்டத்துக்கு சகல உதவிகளையும், ஒத்தாசைகளையும் வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை செயலகத்துக்கும் அமைச்சர் உத்தரவிட்டார்.

வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு மின் விநியோகம் செய்வதற்கு உடனடியாக 132 கே. வி இணைப்புக்களை தொடுக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக கிளிநொச்சிக்கு மின்சாரத்தை வழங்கி,

(5ஆம் பக்கம் பார்க்க)

### திருமலையில் 2ஆவது சம்பவம்:

## வீட்டுக்குள் புகுந்து தாக்கிய மத யானைக்கு 6 பேர்பலி

### பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டது

கொழும்பு, ஜன. 23

திருகோணமலை ஈச்சிலம்பத்தையிலுள்ள பூநகரி கிராமத்தில் மதம் பிடித்த காட்டு யானை ஒன்று வீட்டுக்குள் புகுந்து வீட்டில் உள்ளவர்களைத் தாக்கியதால் குழந்தைகள் உட்பட ஆறு தமிழர் கொல்லப்பட்டனர் மூவர்காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் இடம் பெற்றது.

கொல்லப் பட்டவர்களிலும் காயமடைந்தவர்களிலும் அனேகர் 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்கள் என்று தெரியவந்தது.

யானை அட்டகாசம் புரிந்து கொண்டிருப்பது பற்றிய தகவலை அயலவர் பக்கத்தில் உள்ள இராணுவ முகாமுக்குத் தெரியப்படுத்திய

(5ஆம் பக்கம் பார்க்க)

### பாப்பரசர் பங்குபற்றிய நிகழ்ச்சி

## எம்.பி சித்தார்த்தனுக்கு அழைப்பிதழ் தர மறுப்பு!

கொழும்பு,ஜன 23

பாப்பரசர் கலந்து கொள்ளும் வைபவங்களில் பங்குபற்ற விருப்பம் தெரிவித்து அதற்காக விண்ணப்பித்த வன்னி மாவட்ட புளொட் குழு எம். பியான சித்தார்த்தனுக்கு அழைப்பிதழ் வழங்கப்படவில்லை.

—இத்தகவலை அவரே வெளியிட்டதாகக் கொழும்பு தமிழ் நாளிதழ் ஒன்று தெரிவித்தது.

நான் பிரதிநிதித்துவப்படுத்தும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் வாழ்கின்றனர். தங்கள் பிரதிநிதியாக அவர்கள் என்னைதெரிவு செய்திருந்தனர். எனது தொகுதி மக்கள் சார்பில் பாப்பரசரைத் தரிசிக்க விரும்பிய நான் உரிய அழைப்பிதழைப் பெற விண்ணப்பித்தேன். ஆனால் தரப்படவில்லை' கத்தோலிக்கர்களான எம். பிக்கள் அமைச்சர்களுக்கு மட்டுமே அழைப்பிதழை வழங்கியுள்ளோம். ஏனையோருக்கு இல்லை என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. — இப்படி சித்தார்த்தன் கவலையுடன் தெரிவித்ததாக அப்பத்திரிகை குறிப்பிட்டது.

## யாழ். பல்கலை பேரவையின் புதியஉறுப்பினர்கள்விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். பல்கலைக்கழக பேரவைக்கு புதியவர்களை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நியமித்துள்ளது.

புதிய அரசு பதவியேற்ற பின்னர் சகல பல்கலைக்கழகங்களின் பேரவைகளிலும் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களை இராஜினாமாச் செய்யுமாறு கோரப்பட்டிருந்தது தெரிந்ததே.

இதன்படி யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தனர்.

அவர்களின் இடங்களுக்கு புதிய உறுப்பினர்களை—

தற்போது பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு நியமித்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### 90 ஆம்ஆண்டின்பின் வன்செயலால்

## வடக்கிலிருந்து வெளியேறிய அரச ஊழியருக்கு நஷ்டஈடு!

கொழும்பு, ஜன. 23

1990 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கில் இருந்து வன்செயல்களினால் இடம் பெயர்ந்த அனைத்து அரச ஊழியர்களுக்கும் 50 சதவீத நஷ்டஈடு வழங்க அரசு முடிவு செய்துள்ளது. சொத்துக்கள், உடைமைகளை இழந்தோர் சட்டரீதியான ஆவணங்களைச் சமர்ப்பிக்குமிடத்து நூறு சதவீத நஷ்டஈட்டை வழங்கவும் நாம் தயாராக உள்ளோம் என துறைமுக கப்பல் புனர்வாழ்வு புனரமைப்புத் துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபையில் ஒத்திவைப்பு கேள்வி வேளையில் ஐ. தே. க. எம். பியான ஏ. எச். எம். அஸ்வர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே அஷ்ரப் இதனைத் தெரிவித்தார்.

(ஐ)

### மட்டு. மாவட்டத்தில்

## 350 வீடுகளில் படையினர்; மக்கள் அகதி முகாம்களில்!

கொழும்பு,ஜன.23

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களுக்குச் சொந்தமான 350 வீடுகளில் படையினர் தங்கியிருப்பதால் அந்த வீட்டின் உரிமையாளர்கள் அகதி முகாம்களிலும், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியிருப்பதாக மட்டக்களப்பு செயலக புனர்வாழ்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

அங்கு பிரதேச ரீதியாக இவ்வாறு வீடுகளை இழந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

வாழைச்சேனைப் பிரிவு — 129, களுவாஞ்சிக்குடி — 88, ஆரைப்பற்று —58, மட்டக்களப்புநகர் — 44, போரைதீவுப்பற்று பிரதேசம் — 26, ஏறாவூர் — 5. (உ)

### புத்தளம் -அனுராதபுரம் வீதியில்

## லொறியை கலைத்து சுட்டது "புளொட்"!

### தமிழரும் 2 முஸ்லிம்களும் பலி!!

யாழ்ப்பாணம், ஜன. 23

வவுனியாவிலிருந்து — புத்தளம் நோக்கி லொறியில் சென்று கொண்டிருந்தோரை 'புளொட்' குழுவினர் எனக் கருதப்படுவோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவாறு வாகனம் ஒன்றில் கலைத்துச் சென்று, வழிமறித்துச் சுட்டுக் கொன்றனர்.

இச்சம்பவத்தில் தமிழர் ஒருவரும் மற்றும் இரு முஸ்லிம்களும் உயிரிழந்தனர்; மற்றொரு தமிழர் காயப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை மாலை புத்தளம் — அனுராதபுரம் பிரதான வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

''த ஐலண்ட்'' இதுபற்றிய தகவலை வெளியிட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

சம்பவத்தில் உயிரிழந்த தமிழரின் பெயர் சதாசிவம் என்றும் —

இவர் அண்மையில்தான் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து ''புளொட்'' குழுவினரால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டவர் என்றும்—

அவர் தமது குடும்பத்துடன் சென்று புத்தளத்தில் வசித்து வந்தார் என்றும் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

லொறிச் சாரதி மற்றும் அவரின் உதவியாளரான மொகமட் ராபிக், ஏ. கே. ரகுமத்துல்லா ஆகியோரும் இச்சம்பவத்தில் உயிரிழந்தனர்; ரி. தியாகராஜா என்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### பாப்பரசர் வருகைக்கு முதல் நாள்

## கொழும்பு "ஒபரோய்" ஹோட்டலில் குப்பைக் கூடைக்குள் பீரங்கி குண்டு!

கொழும்பு, ஜன. 23

ஹோட்டல் குப்பைக் கூடைக்குள், விமான எதிர்ப்புப் பீரங்கிக்குரிய குண்டு வந்தது எப்படி?

பாப்பரசரின் இலங்கை விஜயத்துக்கு முதல் நாள், அவர் காலிமுகத்திடலுக்குச் செல்லவிருந்த பாதையில் உள்ள ஹோட்டல் குப்பைக் கூடைக்குள் அந்தக் குண்டு காணப்பட்டதற்கு யார் காரணம்?

இந்தக் கேள்விகளுக்குப் பதில் கண்டறிவதற்காக பொலிஸார், சம்பந்தப்பட்ட ஹோட்டலில் குறிப்பிட்ட தினத்தில் தங்கியிருந்த பாதுகாப்புத்துறை முன்னாள் அதிகாரிகள் 13 பேரை துருவித் துருவி ஆராய்ந்து வருகின்றனர். இந்தப் 13 பேரில் கடற்படையிலிருந்து தப்பியோடிய ஒருவரும் அடங்குவார்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள ஹோட்டல் ''ஒபரோய்'' குப்பைக் கூடைக்குள், வியாழக்கிழமை குண்டு கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து பாப்பரசருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்பு மிகவும் தீவிரப்படுத்தப்பட்டதாக ''திவயின'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

(அ-9)

## புதிய இன நுளம்பினால் மலேரியா குடாநாட்டில் தீவிரமாக பரவுகிறது

### உலக சுகாதாரநிறுவனத்துக்குதகவல்தெரிவிக்கமுடிவு

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். குடாநாட்டில் புதுவித நுளம்பு ஒன்றினால் மலேரியா நோய் அசுர வேகத்தில் பரவி வருவதாக ஆய்வாளர்களினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சிவகுரு யாழ் பல்கலைக் கழகத்தின் உதவியுடன் நடத்திய ஆய்வின் மூலமே இந்த நோய் கண்டு பிடிக்கப்பட்டது.

அனோபிளஸ் சபிடெக்ஸ் என்ற புது நுளம்பே மலேரியாவைப் பரப்புவதாக அறியப்பட்டுள்ளது.

மலேரியா [illegible] அனோபிளஸ் கிளொளி என்ற நுளம்பினால் பரவி வந்தது. ஆனால் இந்தவகை நுளம்புகள் இல்லாத யாழ்ப்பாணப் பகுதியிலும் மலேரியா நோய் பரவி வருவதாக சந்தேகம் எழுந்ததை அடுத்து இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த ஆய்வின் பயனாக புதிய நுளம்பு இனம் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

மலேரியா நோய் புதுவகை நுளம்பினால் பரப்பப்பட்டு வருவது உலக சுகாதார நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். எனவே யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட நுளம்பு இனம் குறித்து உலக சுகாதார நிறுவனத்தின் கவனத்துக்கு கொண்டு [illegible] நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## பேச்சு குறித்து சந்திரிகா பீடாதிபதிகளுக்கு விளக்கம்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் நடந்த மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பாக பௌத்த உயர் பீடத்துடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கலந்தாலோசனை நடத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் நடத்திய சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதி அண்மையில் அஸ்கிரிய, மல்வத்தை பீடாதிபதிகளைச் சந்தித்து விளக்கமளித்துள்ளார்.

இப் பேச்சுக்களின் போது ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்டபெண்டி, கலாசார மத விவகார அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி, புத்தசாசன பிரதி அமைச்சர் திருமதி சுனித்திரா ஜெயசேன ஆகியோரும் பங்குபற்றினர். [அ-3]

### யாழ் குடாநாட்டுக்கான

## அவசரப் புனரமைப்பு திட்டம் குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன. 23

யாழ். மாவட்டத்தில் உடனடியாக மேற்கொள்ள வேண்டிய அவசரப் புனரமைப்புப் பணிகள் குறித்து யாழ். வந்துள்ள உலகவங்கி ஆலோசனைக் குழு நேற்று ஆராய்ந்தது.

யாழ். மாட்டத்தில் உலக வங்கியின் உதவியுடன் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் நடைமுறைக்கு வரவிருக்கும் உடனடி புனரமைப்பு புனர்வாழ்வுத் திட்டத்துக்கு புறம்பாக —

அடுத்த மாதம் முதல் அவசர புனர்வாழ்வுத் திட்டம் ஒன்று அமுல் செய்யப்படவிருக்கிறது.

இந்தத் திட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய வேலைகளை இனம்காணும் பணியில் — வந்திருக்கும்—உலகவங்கிக் குழுவினர் நேற்று ஈடுபட்டனர்.

மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்யும் வகையில் சீநோர் நிறுவனத்தை இயக்கி மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்வது குறித்தும் —

சேதமடைந்த மீன்பிடிப் படகுகளைத் திருத்தத் தேவையான வழி வகைகள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மூளைக் காய்ச்சல் நோய் மட்டக்களப்பில் பரவுகிறது!

### இதுவரை 15 பேர் உயிரிழப்பு!!

கொழும்பு, ஜன. 23

மட்டக்களப்பில் பரவி வரும் மூளைக்காய்ச்சலால் கடந்த மாதத்திற்குப் பின்னர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் 15 பேர் பலியாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

அங்கு கடந்த மாதம் 4 பேரும், இம்மாதம் 19 ஆம் திகதிவரை 11 பேரும் மூளைக்காய்ச்சலுக்கு பலியாகியுள்ளனர்.

மூளைக்காய்ச்சலுக்கு இலக்கான நிலையில் நூற்றுக்கும் அதிகமானோர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் —

ஏனைய நோயாளிகளுக்கான வார்ட்டுகளிலேயே இவர்களும் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருவதால், ஆஸ்பத்திரிக்குள்ளேயே நோய் தொற்றும் அபாயம் இருப்பதாக அஞ்சப்படுவதாகவும் —

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

மாங்காடு, பட்டிப்பளை, கோட்டைக் கல்லாறு, தேற்றாத்தீவு, கல்லடி, உப்போடை, மங்கிக்கட்டு, மருதமுனை, களுவாஞ்சிக்குடி, திருக்கோயில், அக்கரைப்பற்று உட்பட கிராமப்பகுதிகளைச் சேர்ந்தோரே இந்நோய்க்கு இலக்காகி உயிரிழந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியா, கிளிநொச்சி அரச அதிபர்கள் பதவிஏற்பு

வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களுக்கு புதிய அரச அதிபர்கள் இன்று பதவி ஏற்கவிருக்கிறார்கள்.

வவுனியா அரச அதிபராகக் கடமையாற்றிய திரு. எஸ். இல்லைநடராஜா கிளிநொச்சி அரச அதிபராகவும்—

மன்னார் அரச அதிபராகக் கடமையாற்றிய திரு.கே கணேஷ் வவுனியாஅரச அதிபராகவும் — இன்று பதவி ஏற்கிறார்கள்.

மன்னார் மேலதிக அரசாங்க அதிபராகக்கடமையாற்றிய எஸ். எம். குறூஸ் மன்னார் அரச அதிபராக பதவி ஏற்கிறார். (உ-3)

### தமிழக ஆளுநரை மாற்றும்

## ஜெயலலிதாவின் முயற்சி வெற்றியளிக்கவில்லை!

லண்டன், ஜன. 23

தமிழக ஆளுநர் பதவியிலிருந்து சென்னாரெட்டியை அகற்றுமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்த கோரிக்கைக்கு இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இணங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் புதுடில்லி சென்றிருந்த ஜெயலலிதா அங்கு 40 நிமிட நேரம் பிரதமர் ராவுடன் நேரடியாகப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பின் போதே சென்னாரெட்டியை மாற்றும்படி ஜெயலலிதா பிரதமரை நேரடியாகக் கோரியதாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓ

இணுவை மாநகர் காயத்ரி பீட
ஸ்ரீ கண்ணகா பரமேஸ்வரி தேவ்யாலய
மஹா கும்பாபிஷேக
**விஞ்ஞாபனம்**

முகூர்த்த நேரம் இன்று காலை
9- 41 மணி முதல் 10- 30 மணி வரை.

பிரதிஷ்டா பிரதம குரு:
சிவஸ்ரீ மஹேஸ்வர குருக்கள் - நயினை

மாலை 5 மணி திருவூஞ்சல்
மாலை 7 மணி இன்னிசைக் கச்சேரி
திரு. பொன். சுந்தரலிங்கம் குழுவினர்

இங்ஙனம்:
திரு. செ. திருவிளங்கம்
தர்மபரிபாலகர்.

சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள்
தேவஸ்தான அர்ச்சகர்.

(34816)

---

திரைப்படப் பிரியர்களுக்கு ஓர் நல்விருந்து

கடற் புலிகளின் ஆதரவுடன்:
விடுதலைப் புலிகள் கலை,பண்பாட்டு கழகமும்
நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய
இன்னும் ஒரு நாடு தந்த
பொ. தாசனின்

★ **உயிர்ப்பூ** ★
(முழு நீள வண்ணப்படம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும்
நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய
ச. யேசுதாசனின்

★ **செவ்வரத்தம் பூ** ★
(வண்ணக் குறும்படம்)

நெல்லியடி மகாத்மாவிலும்
சாவகச்சேரி தெய்வேந்திராவிலும்
தினசரி 6-30 காட்சிகளாகவும்
சனி, ஞாயிறு 10-30, 2-30, 6-30 காட்சிகளாகவும்
காண்பிக்கப்படுகிறது.

(சி/177)

---

வர்ண – கறுப்பு வெள்ளை படச்சுருள்கள்
குறைந்த விலையில்
**விற்பனைக்கு**

[Colour, B/W Film Rolls Sales]

★ தற்போதைய தட்டுப்பாடான காலத்திலும் வர்ண [Colour Film] கறுப்பு வெள்ளை [B/W Film] படச்சுருள்களை நியாய விலைகளிலும்.

★ கறுப்பு, வெள்ளை பிரதித்தாள்கள் [B/W Papers] சகல அளவுகளிலும் மொத்த, சில்லறை விலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

குறிப்பு:
புகைப்படத்துறைக்கு உபயோகிக்கும் உப-உபகரணங்கள் புதிய அறிமுகத்துடன் விற்பனைக்கு.

தொடர்பு கொள்ளுங்கள்:

**கலக்சி** புகைப்பட சேவை
331 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[சி/418]

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 26 — 01 — 1925
உதிர்வு: 02 — 02 — 1994

விஸ்வப் பிரம்மகுல
**அமரர் இராசா கனகசபாபதி**

திதி: 23 — 01 — 1995

எங்கள் குடும்பம் ஒளிர் விட்டோங்க - உயர்வாய் வாழ்ந்து, இறைபதம் அடைந்த-உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பூனாறி லேன்,
கொக்குவில் மேற்கு.

(34810)

---

# விடுதலைப் புலிகள் இயக்கம் கலையோடு மிகத் தொடர்புடையது

## மிருதங்க அரங்கேற்றவிழாவில் புதுவை

யாழ்ப்பாணம், ஜன. 23

''விடுதலைப் புலிகள் இயக்கம் கலையோடு நெருங்கிய தொடர்புடைய இயக்கம். அதன் தலைவரே ஒரு சிறந்த கலைஞன் ஆவார். சம்பந்தனின் செந்தமிழ் போன்று தமிழுக்கும் இசைக்கும் உள்ள தொடர்பை நாம் உருவாக்கித் தருவோம்.''

விடுதலைப் புலிகள் போராளி செல்வன் ச. வசந்தனின் மிருதங்க அரங்கேற்றத்தில் தலைமை வகித்து உரை நிகழ்த்திய விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை இவ்வாறு கூறினார்.

அரங்கேற்ற விழா 21 ஆம் திகதி இளங் கலைஞர் மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. புதுவை இரத்தினதுரை மேலும் பேசும்போது கூறியதாவது:

நாங்கள் பெறப்போகும் மண்ணை நிர்வகிக்கக் கூடிய தான பல்துறை ஆற்றல் மிக்கவர்களை உருவாக்குவதே எமது நோக்கம். போராளியான வசந்தனின் குடும்பம் கலையோடு தொடர்புடைய குடும்பம். வைத்தியர்கள், இராணுவ தளபாட விற்பனர்கள், கலைஞர்கள், அரசியல் விஞ்ஞானிகள் கொண்ட கூட்டுக் குடும்பமே இயக்கம் என்றார்.

தமிழீழக் கல்விக் கழகத் தலைவர் வண. பிரான்சிஸ் யோசெப் உரை நிகழ்த்துகையில், ''எமது கலை பண்பாட்டு வளர்ச்சிக்கும் போராளிகள் உதவுகின்றார்கள். இதனால் வருங்காலத்தில் எம்மிடையே நல்ல சமுதாயம் ஒன்று உருவாகும்'' என்று கூறினார்.

சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, கலாநிதி சபா ஜெயராசா இன்னிசை வேந்தர் பொன். சுந்தரலிங்கம், கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு. இ. மகேந்திரன், சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அதிபர் திரு கா. சந்திரபாலன், தென்மராட்சி கோட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு அன்பு ஆகியோரும் பேசினார்கள்.

யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சி. இளம்பரிதி மங்கள விளக்கேற்றினார்.

குரு வணக்கம், கலைஞர் கௌரவம், இசையரங்கம் என்பனவும் இடம் பெற்றன.

[க-111]

---

## கண்ணீர் அஞ்சலி

எங்கள் ஆரம்பகால அங்கத்தவரும், பல வருடங்களாக செயற்குழு உறுப்பினரும், செயலாளருமாக நற்சேவை செய்த

**சவரிமுத்து ஆசிர்வாதம் போல்**

[51/1, பழைய பூங்கா வீதி] அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது. அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொய்யாத்தோட்டம்,
சன சமூக நிலையம்.

[34820]

---

## 31ஆம் நாள்
## நினைவு அழைப்பு



திருமதி
**சுகிர்தராணி பதுவைநாயகம்**
[முன்னாள் ஆசிரியை, யா/நவாலி மகா வித்தியாலயம்]

''வாழ்ந்தாலும் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்; மரித்தாலும் ஆண்டவருக்கென்றே மரிக்கிறோம்''
(உரோமர் - 14:8)

29-12-94 அன்று இறைபதமெய்திய திருமதி சுகிர்தராணி பதுவைநாயகம் அவர்களின் 31ஆம் நினைவு நாளாகிய **25—01—95** புதன்கிழமை அன்று காலை 6-30 மணிக்கு நவாலி புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கற் திருப்பலியிலும், அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து, அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், அன்பர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. அ. பதுமைநாயகம் (கணவன்),
ப. அன்ரன கிருபைநாயகம் (மகன்).

அரசடி வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

[34814]

---

## திருமலை மூதூருக்கு படகுச் சேவை

கொழும்பு, ஜன 23

மூதூருக்கான புதிய படகுச் சேவை ஒன்று நாளை ஆரம்பிக்கப்படவுள்ளது.

''மகாவலி நதி'' என்ற பெயரைக்கொண்ட இந்தப் படகு நவீன வசதிகளைக் கொண்டிருக்கும்.

நூறு இருக்கைகள் இந்தப் படகில் உள்ளன. அத்துடன் உயிர் காப்பு அங்கிகளும் வைக்கப்பட்டிருக்கும்.

இலங்கை துறைமுக அதிகார சபைக்குச் சொந்தமான புதிய படகை மூதூர் ப. நோ. கூ. சங்கம் சேவையில் ஈடுபடுத்தும்.

துறைமுக, கப்பல் துறை புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் படகுச் சேவையை ஆரம்பித்து வைப்பார்.

(ஐ)

## நவநாள் திருவிழா

குருநகர், ஜன.23

யாழ். பாஷால் வீதி புதுமை [காணிக்கை] மாதா தேவாலய வருடாந்த நவநாள் திருவிழாக்கள் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 5-45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

இத் தேவாலயத்தில் தொடர்ந்து பத்து தினங்கள் நடக்கும் திருவிழாவில்மாலை ஆராதனையின் போது அருட் திரு மரியசேவியர் அடிகளின் மறை உரைகள் தினமும் இடம்பெறும்.

பெப்ரவரி 2ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சற்பிரசாத ஆராதனை சுற்றுப் பிரகாரம் என்பன இடம்பெறும்

மறுநாள் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5-45 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6-30 மணிக்கு திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி நடைபெறுமென ஆலய பங்குத் தந்தை அருட்திரு. ஆர். எம். ஜி. நேசநாயகம் அடிகள் தெரிவித்தார்.

(அ-51)

## புதிய பாஜ்

வடமராட்சி, ஜன. 23

பருத்தித்துறை துறைமுகத்திற்கு வெள்ளிக்கிழமைநில்கிரி கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட இழுவைப் படகு[பாஜ்] நேற்று முதல் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டது.

[ஐ-173]

---

## அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ஆச்சிரமக் கோயில்

திருப்பணி தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலையில் உள்ள ஸ்தூபியை கட்டி முடிப்பதற்கு—
அனுபவமும் திறமையும் உள்ள சிற்பாசிரியர்
தேவை.
தகுந்த கொடுப்பனவுவழங்கப்படும். உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும்.

செயலாளர்,
ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

[சி-417]

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பேராசிரியர்
உடலமைப்பியல் / நோயியல்/சட்ட மருத்துவம்/மருத்துவம்/ மருந்தியல் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம்.
2. அறக்கொடைத்தவிசு- அங்கக் கோணல் அறுவை மருத்துவம் / கழலையியல்.
3. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / தற்காலிக சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II – உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / உயிரிரசாயனவியல் / உடலமைப்பியல் / நோயியல்/நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் / சட்ட மருத்துவம் / மருந்தியல் / மகப்பேற்று மருத்துவமும், மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம்.
4. விரிவுரையாளர் / தற்காலிக விரிவுரையாளர் – உடற்றொழிலியல்/ சமுதாய மருத்துவம் / உயிரிரசாயனவியல்/ உடலமைப்பியல்/ நோயியல் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் / சட்ட மருத்துவம் / மருந்தியல்/ மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ அறுவை மருத்துவம்.
5. உதவி விரிவுரையாளர் / தற்காலிக உதவி விரிவுரையாளர் – அணு மருத்துவம் (பௌதீகவியல்)
6. தற்காலிக செய்முறைக் காட்டுநர் – உயிரிரசாயனவியல்.

**சம்பள அளவுத்திட்டம்:**

பேராசிரியர்:
ரூபா 16,100- 6X400- 18,500/- மாதமொன்றிற்கு.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்II:
ரூபா 10,650 - 5X325- 12,275/- மாதமொன்றிற்கு.

தற்காலிக சிரேஷ்டவிரிவுரையாளர் தரம் II:
ரூபா 10,650/- (நிலையானது) மாதமொன்றிற்கு.

விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 6,050 - 10X250 - 8,550/- மாதமொன்றிற்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் 6050/- ரூபாவுக்கு இரண்டு படி அதிகமாக அதவாது 6550/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுவர்.)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 6,550/- (நிலையானது) மாதமொன்றிற்கு.

உதவி விரிவுரையாளர்:
ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றிற்கு.

தற்காலிக உதவி விரிவுரையாளர்:
ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றிற்கு.

தற்காலிக செய்முறைக் காட்டுநர்:
ரூபா 4,420/- (நிலையானது) மாதமொன்றிற்கு.

குறிப்பு:

அ) 1993 மே 12 ஆம் திகதி 9 / 93 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

ஆ) நிரந்தரப் பதவியொன்றிற்கு ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தின் 10%மும் '' புத்தகப்படியாக '' ஒவ்வொரு காலாண்டின் ஆரப்பத்திலும் காலாண்டுத் தவணைப் பணமாகச் செலுத்தப்படும்.

இ) 1995 ஜூன் 30ஆம் திகதி வரை ''நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக'' மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவு திகதி 1995-03-30, இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 1995-02-22.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக்கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும்' விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா முத்திரைபொட்டப்பட்ட 23X10 ச மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

ஒப்பந்த அடிப்படையான நியமனமும் கவனிக்கப்படும்.

குறிப்பு:

மேற்படி விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும், கொழும்பு 13, ஆட்டுப்பட்டித் தெரு, 154ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாணக் கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1995 - 01 - 10.

(சி- 413)

---

கல்வியின் கருவூலம் மட்டுமல்ல;
பண்பின் விளைநிலமும் இதுதான்!

க.பொ.த சாதாரணதரம்
பகல்முழுநேரவகுப்பு
O/L
**யூனிவேர்சல்**
கந்தர்மடம் — யாழ்ப்பாணம்.

ஆரம்பம்: 27-01-1995 காலை 8.30 மணி

(சி/419)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமய சமரசக் கோவில்



மனிதன் தெய்வீகமானவன் என்பதை போதித்து சமய சமரசத்தை நிலைநாட்டிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு சென்னையில் மூன்று கோடி ரூபா செலவில் கோவில் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

சென்னையில் உள்ள ஸ்ரீராம கிருஷ்ண மடத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்தக் கோவிலுக்கு ''ஸ்ரீ ராம கிருஷ்ணர் சமய சமரசக் கோவில்'' என்று பெயரிடப்படும்.

ஒரே தடவையில் சுமார் ஆயிரம் பேர் அமரத்தக்க விசாலமான மண்டபத்துடன் கூடியதாக இந்தக் கோவில் அமையும்.

முழுவதும் கல்லினால் ஆன இக்கோவிலை தமிழகத்தின் பிரபல பாரம்பரிய சிற்பக்கலை வல்லுநரான திரு. கணபதி ஸ்தபதி நிர்மாணிக்க உள்ளார்.

புராதன மற்றும் நவீன சிற்பக் கலைகளின் சங்கமமாக இக்கோவில் திகழும் என்று தெரிவிக்கப்பட்டது.

(அ-ஐ)

# இன்றைய அரசியல் சூழ்நிலையில் மக்கள்விழிப்புடன்இருப்பதுஅவசியம்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் உரை

யாழ்ப்பாணம், ஜன. 23

''சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இன்றைய அரசியல் சூழ்நிலையில் மக்கள் விழிப்பாகவும் மிகுந்த உறுதிப்பாட்டுடனும் இருக்கவேண்டியது அவசியமாகும்''

—இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு சு. ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடந்த போராளிக் கலைஞன் செல்வன் வசந்தனின் மிருதங்க அரங்கேற்ற நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடந்த அந்த நிகழ்வில் திரு தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:-

சந்திரிகா பதவிக்கு வந்ததும் சமாதானம் ஏற்படும் என மக்கள் நம்பிக்கை கொண்டனர்.

ஆனால் அதன் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவின் தொடர்ச்சியான அரசியல் அணுகுமுறைகள், செயற்பாடுகள் அனைத்துமே அந்த நம்பிக்கையை சிதறடித்து நிற்கின்றன.

முதற்கட்டப் பேச்சுக்கள் நம்பிக்கையை ஊட்டக் கூடியதாகவே இருந்தது. ஆனால் அதில் பெரிய விடயங்கள் நடைமுறைக்கு வரவில்லை. அப்போது சந்திரிகாவின் கையில் அதிகாரம் இருக்கவில்லை.

தற்போது அவர் கையில் முழுமையான அதிகாரங்கள் கிடைத்துள்ளன. மக்கள் அரசுக்கு பூரண அதிகாரம் வழங்கியுள்ளனர். ஆனால் இதுவரை நடந்த மூன்று கட்டப் பேச்சுக்களில் பிரச்சினைகள் தீர ஆக்கபூர்வமான அணுகுமுறைகள் இடம் பெற்றனவா?

எரிபொருள் தடையை நீக்க இராணுவம் தயாராக இல்லை என அறிகிறோம்.

பொருளாதாரத் தடையை தளர்த்தும் விடயத்தில் எரிபொருள் தடைநீக்கமானது முக்கியமானதாகும்.

எரிபொருள் தடை முற்றாக நீக்கப்பட்டால் தான் தடைநீக்கப்படும் ஏனைய பொருள்களை சுலபமாக எடுத்துவர முடியும் — என்றார்.

(ஐ-111)

## மாணவர் காப்புறுதி திட்டம் மாத இறுதியில் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 23

பாடசாலை மாணவர்களுக்கு காப்புறுதிப் பத்திரம் வழங்கும் திட்டம் இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதிலும் அமுல் செய்யப்படவுள்ள காப்புறுதி எழுச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக இம்மாத இறுதியில் மாத்தாளையில் நடைபெறவுள்ள வைபவம் ஒன்றில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மாணவர் காப்புறுதி திட்டத்தை ஆரம்பித்துவைப்பார்.

இந்தக் காப்புறுதித்திட்டத்துக்கு ஒவ்வொரு மாணவரும் மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வருடத்துக்கு 12 ரூபா செலுத்தவேண்டும்.

இந்தப்பணத்தின் ஒரு பகுதி பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் என்று காப்புறுதி கூட்டுத் தாபனத்தின் தலைவர் தெரிவித்தார். (ஐ)

## விவேகானந்தர் பிறந்தநாள் திதி பூஜை

யாழ்ப்பாணம், ஜன. 23

சுவாமி விவேகானந்தரின் பிறந்த நாள் திதி பூஜை பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் இன்றுநண்பகல் நடைபெறும். மாலை 4-30 மணிக்கு சுவாமியின் பெயரால் சிறப்புப் பணிகள் இடம்பெறும்

பருத்தித்துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் தண்ணீர் கொள்கலன், மண்ணெண்ணெய் அடுப்பு, பாடசாலை உபகரணங்கள் ஆகியவை அன்பளிப்பு செய்யப்படும். (க)

## புராதன பைபிள் பிரதி விகாரையில் மீட்பு!

கொழும்பு, ஜன. 23

புனித நூலான பைபிளின் மிகத்தொன்மையான சமஸ்கிருத வாசகப் பிரதி ஒன்று மாத்தறைக்கு அருகில் ஹக்மனையில் உள்ள புராதன பௌத்தவிகாரை ஒன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக ''சண்டே ஒப்சேர்வர்'' செய்தி வெளியிட்டுள்ளது.

(ஐ-க)

## கணிதபாட செயலமர்வு

கொழும்புத்துறை, ஜன. 23

தமிழீழ பொதுத்தேர்வில் கணித பாடத்தில் சித்தியடைந்த மாணவர்களுக்கான விசேட செயலமர்வு ஒன்று எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு கரணவாய் பொன்னம்பலம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-30)

## யோகாசன செய்முறை விழா

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனத்தாரின் விசேட செய்முறை அரங்கேற்ற விழா இம்மாதம் 29 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் திவ்யஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவிற்கு சட்டத்தரணி திரு. க. கேசவன் தலைமை வகிப்பார். வைத்தியக் கலாநிதி திரு. தயா. சோமசுந்தரம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாகபலர் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

''நோயற்ற வாழ்வுக்கு யோகாசனம்''எனும் தலைப்பிலான வில்லிசையும் அதில் இடம்பெறும். (ஐ)

## லயன்ஸ் மாவட்ட ஆளுநர் யாழ்.விஜயம்

சண்டிலிப்பாய், ஜன. 23

கொழும்பிலுள்ள லயன்ஸ் 306B மாவட்ட ஆளுநர் லயன் எஸ் சிவபாதசுந்தரம் யாழ். மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வமான விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம்மாதம் 28 ஆம்திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார். (க-135)

# விசாரணை ஆணைக்குழுக்களுக்கு தகவல் தெரிவிக்கக் கோரிக்கை

## மனித உரிமை குழுக்கள் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 23

கடத்தப்பட்டவர்கள் மற்றும் காணாமற் போனவர்கள் பற்றி விசாரணை ஆணைக்குழுக்களுக்கு தகவல்களைத் தெரிவிக்குமாறு மனித உரிமைகள் ஸ்தாபனங்கள் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இத்தகைய சட்ட விரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் பற்றிய விவரங்களை தெரிவிப்பது தேசியக் கடமையாகும் என்றும்—

இவை போன்ற ஜனநாயக விரோத நடவடிக்கைகள் மீண்டும் நடக்காமல் தடுப்பதற்கு அது உதவும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்ட நபர்களை கண்டறிவதில் சாட்சியங்களை சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

காணாமற் போனோர், கடத்தப்பட்டோர் பற்றி விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள மூன்று ஆணைக்குழுக்களுக்கு அடுத்த மாதம் 14 ஆம் திகதி வரை விவரங்களை எழுத்து மூலம் தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ

## முருக வழிபாட்டு ஆதாரம் ஹரப்பாவில் கண்டுபிடிப்பு!

மணிலா, ஜன. 23

இந்தியாவின் பண்டைய நாகரிகங்களில் ஒன்றான ஹரப்பா நாகரிகத்தில் முருக வழிபாட்டுக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.

பின்லாந்து நாட்டைச் சேர்ந்த ஆய்வாளரான பேராசிரியர் அஸ்கோ பார்போல் இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

ஹரப்பாவில் நிலவிய நாகரிகம் திராவிட நாகரிகமே ஆகும் என்றும் பேராசிரியர் அஸ்கோ பார்கோல் கூறியிருக்கிறார். (ஐ)


## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் (தகுதி காண்) / தாவரவியல் / பௌதிகவியல் / கணிதமும் புள்ளிவிபரவியலும்.

ஓராண்டு திருப்திகரமான சேவையை நிறைவு செய்தாரென தலைவராலும் பீடத் தலைவராலும் உறுதிப் படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதி காண்) ஒருவருக்கு விரிவுரையாளர் (தகுதி காண்) என்ற பதவிப் பெயரை அளிக்க முடியும் என்பதுடன் துணைவேந்தரால் ரூபா 6050 — 10 X 250 — 8, 550/- (மாதமொன்றுக்கு) என்ற சம்பள அளவுத்திட்டத்தில் அவரை வைக்க முடியும்.

முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) டன் சித்தி பெற்றுள்ள பட்டதாரிகள் உதவி விரிவுரையாளர்(தகுதி காண்), ஓராண்டு காலம் சேவையாற்ற வேண்டுமென்ற நிபந்தனையிலிருந்து விலக்களிக்கப்பட்டு நிலையான சம்பளத்தில் விரிவுரையாளர் (தகுதி காண்) தரத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

சம்பள அளவுத்திட்டம்:

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I:
ரூபா 12,725 - 8X325— 15,325/-

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II:
ரூபா 10,650—5X325— 12,275/-

உதவி விரிவுரையாளர்:
ரூபா 5,270/- (நிலையானது) மாதமொன்றுக்கு

இத்துடன்,

அ) திலுவையிலுள்ள வேலை நிறைவேற்றப்படியாக 1995 யூன் 30 ஆம் திகதி வரை சம்பளத்தில் 25 சத வீதத்திற்கு சமமான தொகை செலுத்தப்படும்.

இத்துடன்,

அ) ஒவ்வொரு ஆண்டுக்கு ரூபா 10,000/- படியும் அத்துடன் ஆண்டு அடிப்படைச் சம்பளத்தினதும், திலுவையிலுள்ள பணியை நிறைவேற்றுவதற்கான ஆண்டுப் படியின் 10%மும் ஒவ்வொரு காலாண்டின் ஆரம்பத்திலும் காலாண்டுத் தவணைப் புத்தகப் படியாகச் செலுத்தப்படும்.

1993 மே 12ஆம் தேதிய 9/93 இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கேற்ப மாதாந்தப் படியாக ரூபா 600/- செலுத்தப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி

**1995-02-28**

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத் திட்டத்தில் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக் கழகத்தின் தாபனக் கிளைச் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் 23 X 10 ச. மீ. அளவுடைய ரூபா 1/- முத்திரை ஒட்டப்பட்டகடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

குறிப்பு:

1. விண்ணப்பப்படிவங்களையும் இதர விவரங்களையும், கொழும்பு 13, ஆட்டுப் பட்டித்தெரு 154 ஆம் இலக்கத்திலுள்ள யாழ்ப்பாண கூட்டுறவுக் களஞ்சியத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.
2. ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
1995 - 01 - 11

ஒ/411)


# கணித பாடம் கற்றல், கற்பித்தல், பரீட்சை சம்பந்தமாக மீளாய்வு அவசியமானது

*இக் கட்டுரையாளர் 30 ஆண்டு கால அனுபவம் உடைய கணித பாடஆசிரியர் ஆவார். அவர் கணித பாடம் தொடர்பாக கல்வி உலகின் கவனத்துக்குரிய சில பிரச்சினைகளை தொட்டுக் காட்டியுள்ளார்.*

இற்றைக்கு சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் கணிதம் சம்பந்தமான தூய கணிதம் (Pure Mathe-Matics) ஆரம்ப கணிதம் (Elementary Mathematics), வர்த்தக எண்கணிதம் (Commercial Arithmetic), எண் கணிதம் (Arithmetic) ஆகிய பாடங்கள் பாடசாலை பாடவிதானத்தில் அமைந்திருந்தன.

பெரும்பாலான பாடசாலைகளில் எண் கணிதம் என்ற பாடமே கற்பிக்கப்பட்டு வந்தது. சில பாடசாலைகளில் மட்டும் எண் கணிதம் உள்ளிட்டுத் தூய கணிதம், வர்த்தக எண்கணிதம், எண் கணிதம் ஆகிய பாடங்கள் போதிக்கப்பட்டன.

மேலே குறிப்பிட்ட பாடங்களில் ஏதாவதொன்றினைத் தெரிந்து க. பொ. த. (சாதாரண) தர பரீட்சைக்கு கட்டாய பாடமாக தோற்ற வேண்டியிருந்தது. பாடசாலைகளில் தூய கணிதம் எனும் பாடம் கற்பிக்கப்பட்ட போதிலும் பெரும்பாலும் விஞ்ஞான பாடங்களை கற்கும் மாணவர்களே இப் பாடத்தினை கற்பது வழக்கம். ஏனையோர் எண் கணிதம், வர்த்தக எண் கணிதம் என்பவற்றுள் ஒன்றினைத் தெரிந்து பரீட்சைக்குத் தோற்றுவர். இவற்றிலிருந்து தூய கணிதம் என்ற பாடத்தினை மாணவர் தொகுதியில் ஒரு சிறு பகுதியினரே கற்றனர் என்பது தெளிவு.

### ஆரம்ப கணிதம்

இதனையடுத்த காலப்பகுதியில் ஆரம்ப கணிதம் என்ற பாடம் பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டது. இப்பாடம் எண்கணிதம் அட்சரகணிதம் (Algebra) கேத்திரகணிதம் (Geometry)என்ற பகுதிகளை உள்ளடக்கிய ஒரு பாடமாகும். இதனை ஆறாம் வகுப்பு (ஆண்டு-7) தொடக்கம் எட்டாம் வகுப்பு (ஆண்டு-9)வரை மாணவர் கற்றனர். எட்டாம் வகுப்பில் இப்பாடத்தில் திறமையுடைய மாணவர்களே தொடர்ந்து தூய கணிதம் கற்க நெறிப்படுத்தப்படுவர். ஏனையோர் வர்த்தக எண் கணிதம் அல்லது எண்கணிதம் என்ற பாடத்தினைக் கற்று க. பொ. த. (சாதாரண) தர பரீட்சைக்குத் தோற்றுவர்.

இத்தகைய பலதரப்பட்ட கணிதம் தொடர்பானபாடங்களில் மாணவர்கள் தமது ஆற்றலுக்கு ஏற்ப ஒன்றினைத் தெரிந்து கற்றுப் பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பு அளிக்கப்பட்டது.

1972ஆம் வருடம் நடைமுறைப்படுத்தப்பட்ட கல்வித் திட்டத்தின்படி கணிதம் (எண்கணிதம், கேத்திர கணிதம், அட்சர கணிதம், புதிய கணிதம் -Modern Maths ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது) ஆறாம் வகுப்பிலிருந்து சகல பாடசாலைகளிலும் கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டு வருகின்றது. இப் பாடத்தினைத் தொடர்ந்து கற்று க.பொ.த. [சாதாரண] தரப் பரீட்சைக்குத் தோற்றுவர்.

### தற்போதைய பாடத்திட்டம்

மேற்படிப்பினை மேற்கொள்ளும் மாணவர்கள், தொழில்வாய்ப்பினைத்தேடும் சகலரும் கணிதபாடத்தில் சித்தியெய்தவேண்டியது அவசியமாகின்றது. தற்பொழுது நடைமுறையிலுள்ள கணித பாடத்திட்டம் முன்னைய தூயகணிதம் என்ற பாடத்திற்குரிய பகுதிகளுடன் புதிய கணிதப் பகுதிகளான தொடைகள் என்பவற்றுடன் நிகழ்தகவு, வரி, காப்புறுதி, புள்ளிவிபரவியல் என்ற பகுதிகளையும் உள்ளடக்கியதாகவுள்ளது. தற்பொழுது நடைமுறையிலுள்ள பாடத்திட்டம் முன்னைய கணிதம் தொடர்பான பாடங்களை விட கூடிய தரமுடையது என்பது புலனாகும். இப்பரந்த பாட அலகுகளைக் கொண்ட கணித பாடத்தினை எல்லா மாணவர்க்கும் போதிப்பதென்பது மிகச் சிக்கலான விடயமென்பதனை கணிதம் கற்பிக்கும் ஆசிரியர்கள் நன்கறிவர்.

**—பொ. ச.ஞானசீலன்—**

### பரீட்சை

பரீட்சிக்கப்படும் முறையினை நாம் கருத்திற்கொள்வோமாயின் முன்னைய தூய கணிதம் என்ற பாடம் இரு வினாப்பத்திரங்களால் ஆறு மணி நேரங்கொண்ட வினாப்பத்திரங்களால் பரீட்சிக்கப்பட்டது. தற்பொழுது இவ்விரிந்த பாடப்பகுதிகளைக் கொண்ட கணிதம் எனும் பாடம் நாலு மணித்தியாலங்களைக் கொண்ட இரு வினாப்பத்திரங்களால் பரீட்சிக்கப்படுகின்றது. இதனால் முன்பிருந்த நிலையிலும் மாணவர்கள் சித்தி பெறக்கூடிய வாய்ப்புகள் குறைவாகவே உள்ளது.

### கவனத்துக்குரிய விஷயங்கள்

கணித பாடம் கற்றல், கற்பித்தல், பரீட்சை சம்பந்தமாக பின்வரும் விடயங்களை கவனத்திற் கொள்ளல் நன்று.

1. எண்கணிதம், அட்சர கணிதம், கேத்திர கணிதம், திரிகோண கணிதம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கணிதம் என்ற பாடம் சகல மாணவர்க்கும் கட்டாய பாடமாக அமைய வேண்டுமா?

2. உள நூல் வல்லாரின் கொள்கைக்கிணங்க சில பாடங்களைக் கற்க அப் பாடங்களுக்குரிய சிறப்பாற்றல் (Special Aptitudes) அமைவது அவசியமாகும். கேத்திர கணிதம் போன்ற நுட்பமான பகுதியினை புரிந்து கொள்ளும் சிறப்பாற்றலில்லாத மாணவனை அப் பகுதியினைக் கற்குமாறு பணித்தல் அவன் இயல்பாற்றலைத் தடை செய்வதோடு மேலதிக சுமையைப் பாரப்படுத்துவதாக அமையுமா?

3. கூடுதலான பகுதிகளைக் கற்பிக்கத் திட்டமிட்டு மாணவர்க்கு அத்தியாவசியமான எண்கணிதப் பகுதிகளையேனும் கற்பிக்க முடியாத நிலை உண்டா?

4. மாணவர்களின் பெரும் பகுதியினர்க்கு எண்கணிதப் பகுதிகளான நான்கு விதிகள் (கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல்) என்பனவும் அளவியல் (பரப்பு, கனவளவு) நூற்றுவீதம் தொடர்பான பகுதிகளுமே வாழ்க்கைக்கு மிகப்பயனளிக்கக் கூடிய பகுதிகளாகும்.

அட்சர கணிதம், கேத்திர கணிதம் என்ற பகுதிகளின் அடிப்படைத் தத்துவங்களை எட்டாம் வகுப்பு (ஆண்டு 9) வரைக்கும் சகல மாணவர்க்கும் கற்பித்தல் போதியதாக அமையாதா சகல மாணவர்க்கும் க.பொ. த.(சாதாரண) தரம் வரை அட்சர கேத்திர திரிகோண கணிதப் பகுதிகள் கற்பித்தல் அவசியந்தானா?

5. நடைமுறையிலுள்ள கணித பாடத்தில் சிலபகுதிகள் உதாரணமாக நிகழ்தகவு, புள்ளிவிபரவியல் ஆகிய பகுதிகள் சாதாரண தர மாணவர்களின் முதிர்ச்சிக்கு (Mental Matury) அப்பாற்பட்டனவா? இப்பகுதிகள் முன்னர் பல்கலைக்கழகங்களிலும் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகளிலுமே கற்பிக்கப்பட்ட பகுதிகளாகும்.

6. குறிப்பிட்ட காலப் பகுதியில் இவ்விரிந்த பாடத்திட்டத்தினை சகல மாணவர்க்கும் திருப்திகரமாகக் கற்பிக்க முடியுமா?

7. கணிதம் சம்பந்தமாக முன்பிருந்தது போன்ற பாடக் கூட்டங்களிலிருந்து மாணவர்களின் ஆற்றலுக்கேற்ப ஒன்றினைத் தெரிந்து பரீட்சைக்குத்தோற்ற சந்தர்ப்பம் அளிப்பது நன்றா?

மாணவர்கள் நலனில் அக்கறை கொண்டுள்ள அனைவரும் இவ் விடயங்களை ஆழ்ந்து அலசி ஆராய்ந்து மீளாய்வு செய்தல் அவசியமாகும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

C-70 எக்கிளேபவர் சிவப்பு நிற மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: A. S. நடராசா, இல. 1, பழைய பஸ் நிலையம், யாழ்ப்பாணம். [34805]

மிகவும் நல்ல நிலையிலுள்ள R.A. Lister 8 H P. England, இரு மில் என்ஜின்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு; எஸ். இந்திரன், மே/பா சிவராஜா, யோக மாளிகை, வல்வை வீதி, சங்கானை. [34803]

''பொக்கட் டோக்'' விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; செ. சர்வானந்தராஜா, 393/9, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். சந்திக்க வேண்டிய நேரம் பிற்பகல் 4—6 மணி. (34813)

### புலமைப் பரிசில் - 95

யாழ் Bond நிறுவனத்தாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

### தேவை

அப்பம், றொட்டி மற்றும் போளி தயாரிப்பதில் அனுபவமுள்ளவர் தேவை. நேரில் வரவும். ரவர் கோப்பி அன்கூல்பார், 324, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். (சி-312)

### தட்டச்சு யந்திரம்

புதிய Keyboard தமிழ் Typewriter தேவை. தொடர்பு கொள்ள School of Business Administration, 16, 3Rd, Cross Street, Jaffna [சி-410]

### மண் விற்பனை

வீதிகளின் பக்கங்களில் வெட்டப்படும் மண் விற்பனைக்குண்டு. தேவையானோர் தொடர்புகொள்ள வேண்டிய இடம். வேலைப் பகுதி, தமிழீழ நிர்வாக சேவை, துண்டிச்சந்தி, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி 409)




(சி-261)

---

முதலாம் ஆண்டு

## ★ திருமண வாழ்த்து ★

(23 — 01 — 1995)

### ரஞ்சன் - சித்திரா தம்பதிகள்

11/5 செம்மணி வீதி, நல்லூரைச் சேர்ந்த ரஞ்சன் சித்திரா தம்பதிகள் தமது முதலாவது திருமண நன்நாளை அவர்கள் இல்லத்தில் இன்று கொண்டாடுகின்றார்கள். இவர்களை அம்மா, அப்பா, சாந்தி, ஈஸ்வரன், ஜெகதீஸ்வரன், அன்ரி மாலினி, கார்த்தீபன் தங்கை சுசிலா, சின்னமாமா, பெரியமாமா, குடும்பத்தினர், ஜேர்மன் தம்பி, கனடா தம்பி, இத்தாலி சித்தப்பா, கொழும்பு சித்தி, சித்தப்பா, பிரான்ஸ் வவசாக்கா குடும்பத்தினர், திருகோணமலை சறோ அக்கா குடும்பத்தினர், ஜேர்மன் தயா குடும்பத்தினர் நல்லூர் விஜயன், நிர்மலா, வித்யா, விநோதன் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், பெரியோர்கள் அனைவரும் பல்லாண்டு காலம் எல்லாம் பெற்று பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
செல்வி சுசிலா பொன்னுத்துரை.
சங்குவேலி. (34632)

---

மீட்டல் மட்டும்

பகல் நேர

## (DAY CLASS)

பொருளியல் இறுதிப்பிரிவு

திரு. உதயன்

திங், செவ், வியா, வெள்ளி 10 மணி

இம்மாதத்திற்குள் மட்டும் அனுமதி வழங்கப்படும்.

## C. C. A

374, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/302)

---

உ

# அகில இலங்கை கம்பன் கழகம்

வழங்கும்

# மகர யாழ் விருது

எமது கழகம் வருடந்தோறும் நடத்தும் கம்பன் விழாவில், மக்கள் கருத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு மேற்படி மகர யாழ் விருதினை வழங்கி வருவது அனைவரும் அறிந்ததே.

இவ்விருது வழங்கலைப் பாராட்டி, வெளிநாட்டிலுள்ள பல கழக நண்பர்கள் இவ்விருதின் தொகையை அதிகரிப்பதற்குத் தாங்கள் உதவ முன்வந்துள்ளனர்

எனவே, எமது கழகம் பதினைந்தாண்டுகளை நிறைவு செய்யும் இவ் வருடத்திலிருந்து இவ்விருதிற்கான பணமுடிப்பை

**ரூபா 1,00,000 (ரூபா ஒரு லட்சம்)**

ஆக உயர்த்தி வழங்க முடிவு செய்துள்ளது.

இவ் விருதிற்குரியவராகத் தெரிவு செய்யப்படுபவருக்கு மேற்குறித்த

தொகைப் பணமுடிப்போடு

தங்கப்பதக்கமும், வெள்ளியினாலான மகர யாழ் விருதும்

முதல் நாள் கம்பன் விழாவில் வழங்கப்படும்.

தாம் சார்ந்த துறையினூடு தியாக உணர்ச்சியோடும் இனப்பற்றோடும் மனிதாபிமானத்தோடும் இம் மண்ணுக்காகத் தொண்டாற்றி எமது இளைய தலைமுறைக்கு முன்னுதாரணமாக வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவரையே இவ் விருதுக்காக தேர்ந்தெடுப்பது எமது கழகத்தின் மரபு.

1993க்கான விருதினை வைத்திய கலாநிதி ச. சிவகுமாரன் அவர்களும் 1994க்கான விருதினை முன்னாள் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அமரர் அ. துரைராசா அவர்களும் பெற்றமை அறிந்ததே.

இவ்வாண்டு இவ்விருது பெறுதற்குப் பொருத்தமான சான்றோரின் பெயர் விவரங்களை, பொதுமக்களும், சமூக நிறுவனங்களும் சிபார்சு செய்து கீழ்க்கண்ட எமது முகவரிக்கு எதிர்வரும் **15—02—1995**க்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

விருது பற்றிய இறுதியான முடிவு கழக அறிஞர் குழுவினால் தீர்மானிக்கப்படும்

சிபார்சு அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேற்புறத்தில்

"மகர யாழ் விருதுக்கான சிபார்சு - 1995"

எனக் குறிப்பிடவும்

''கம்பன் புகழ்பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்''

தி. திருநந்தகுமார், தலைவர்.
க. குமாரதாசன், செயலர்.

## அகில இலங்கைக் கம்பன் கழகம்,

300, கோயில் வீதி, நல்லூர்.

---

# அறிவித்தல்

வட—கிழக்கு மாகாணங்களில் இருந்து ஆட்கள் தன்னிச்சையில்லாதவாறு அகற்றப்பட்டமை காணாமல் போனமை தொடர்பான சனாதிபதி

## விசாரணை ஆணைக்குழு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அதி மேதகு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் விசாரணை ஆணைக்குழு சட்டத்தின் (அத்தியாயம் 393) 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அமைக்கப்பட்ட ஆணைக்குழுவில் திரு. கிருஷ்ணபிள்ளை பாலகிட்ணர் (தலைவர்) லுஷிஸ்துர வோட்டா, ரோமியுலன் வித்யாரட்ண மற்றும் வேதாராச்சி நாவலகே வில்சன் பின்வரும் விடயங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

(அ) 1988 சனவரி 01 இற்குப் பிந்திய எந்நேரத்திலும் வட மாகாணத்திலும் கிழக்கு மாகாணத்திலும் எவரெனும் ஆட்கள் தத்தமது வதிவிடங்களில் இருந்து தன்னிச்சையாகவன்றி அகற்றப்பட்டுள்ளனரா அல்லது காணாமற் போயுள்ளனரா என்பது;

(ஆ) அத்தகைய சாட்டப்பட்ட அகற்றுகைகளை அல்லது காணாமற்போனமைகளை நிலைநாட்டுவதற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள சான்றுகள்;

(இ) அவ்வண்ணம் அகற்றப்பட்டதான அல்லது காணாமல் போனதாகச் சாட்டப்படும் ஆட்களின் தற்போதைய இருப்பிடங்கள்;

(ஈ) சாட்டப்பட்ட அகற்றுகைக்கு அல்லது காணாமற் போனமைக்கு பொறுப்பாகவுள்ள ஆள் அல்லது ஆட்களைச் சுட்டிக் காட்டக் கூடிய நம்பத்தகு தகவல் எதுவும் உளதா என்பது;

(உ) பொறுப்பாயுள்ளவர்களெனக் காணப்படும் ஆட்களுக்கெதிராக எடுக்கப்படக் கூடிய சட்ட நடவடிக்கைகள்.

(ஊ) இத்தகைய சட்டவிரோதச் செயற்பாடுகள் வருங்காலத்தில் இடம்பெறுவதைத் தடுப்பதற்குத் தேவையான பரிகார நடவடிக்கைகள்;

(எ) அவ்வாறு அகற்றப்பட்டு சாட்டப்பட்டுள்ளவர்கள் அல்லது காணாமற் போயுள்ளவர்களெனச் சாட்டப்படும் ஆட்களின் பெற்றோருக்கும் வாழ்க்கைத் துணைகளுக்கும், தங்கி வாழுவோருக்கும் அளிக்கப்படவேண்டிய நிவாரணம் ஏதேனும் இருப்பின்;

இந்த ஆணைப்பத்திரத்தின் நியதிகளின் கீழ் விசாரணை செய்யப்பட்ட எவையெனும் கருமங்கள் தொடர்பான விதப்புரைகளைச் செய்யும்படியும் இவ்வாணையாளர்கள் வேண்டப்பட்டுள்ளார்கள்.

2. அத்துடன் குறித்த ஆணையாளர்கள் மேற்கொள்ளப்பட்ட கருமங்களைப் பற்றி அவசியமானதென தோன்றுகின்ற விடயங்கள் சம்பந்தமாக விசாரணை நடாத்துவதற்கும் அவை சம்பந்தமாக வேறு சகல புலனாய்வுகளைச் செய்வதற்கும் அதிகாரம் அளித்து தத்துவம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இவ்வாணைக்குழுவின் விசாரணைகளின் முடிவுகளையும் அதன் விதப்புரைகளையும் கொண்ட அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும்படி வேண்டப்பட்டுள்ளார்கள்.

3. முன்னாள் நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. எஸ். சி. மாணிக்கவாசகர் அவர்கள் இவ் ஆணைக்குழுவின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

4. மேலே குறிப்பிடப்பட்டுள்ள யாதேனும் ஒரு விடயம் அல்லது விடயங்கள் தொடர்பாக வடமாகாணம், கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற யாதெனும் நிகழ்வுகள் தொடர்பாக தகவல் தெரிவிக்க விரும்பும் எவரெனும் அல்லது எந்த நிறுவனமேனும் இருப்பின் அவ் விடயம்பற்றி இவ் ஆணைக்குழுவின் செயலாளருக்கு 1995 பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ எழுத்து மூலம் அறிவிக்கும்படி இவ் ஆணைக்குழு இத்தால் கோரிக்கை விடுக்கின்றது. அவ்வாறு அனுப்பப்படும் எழுத்துமூலத் தகவலில், தகவல் அளிக்கும் நபரோ நிறுவனமோ தெரிவிக்க விரும்பும் விடயமோ, விடயங்கள் யாவை என உறுதியாகத் தெரிவிப்பதுடன் அக் கூற்றுக்கு ஆதாரமாக விசாரிக்கப்படவேண்டிய சாட்சிகளின் பெயர்களையும், விலாசங்களையும், யாதெனும் ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் ஆணைக்குழுவின் முன்னிலையில் சமர்ப்பிக்கவேண்டும்.

5. அத்தகைய எவரெனும் ஒரு நபரோ, ஸ்தாபனமோ தமது சாட்சியத்தை இரகசியமாக கூற விரும்பின் அவ்வகையான விருப்பம் பற்றி இவ் ஆணைக்குழுவிற்கு எழுத்து மூலம் தெரிவித்தல் வேண்டும். ஆணைக்குழு அத்தகைய சாட்சியத்தை பெறுவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளும். இவ்வாறு ஒழுங்கு செய்யும்படி கோருபவர்களின் விண்ணப்பங்கள் இரகசியமாகக் கையாளப்படும்.

6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல விடயங்கள் தொடர்பாகவும் ஆணைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட வேண்டிய விடயங்கள் யாவும் 1995 பெப்ரவரி மாதம் 14ஆம் திகதியோ அதற்கு முன்னரோ பின்வரும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

செயலாளர்,
வட - கிழக்கு மாகாணங்களில் இருந்து தன்னிச்சையில்லாதவாறு அகற்றப்பட்ட காணாமற் போயுள்ளவர்கள் பற்றி விசாரணை செய்யும் சனாதிபதி ஆணைக்குழு,
நீதி அமைச்சு,
உயர் நீதிமன்றக் கட்டிடம்,
கொழும்பு — 12.

7. அத்தகைய நபர் அல்லது அமைப்புகளில் சாட்சியங்கள் பதிவு செய்யப்படவுள்ள திகதியும், இடமும் காலக்கிரமத்தில் தெரிவிக்கப்படும்.

8. [illegible] சாட்சியளிக்கும் அத்தகைய ஒவ்வொரு நபருக்கு அல்லது நிறுவனத்திற்கு [illegible] ஆணைக்குழுக்கள் சட்டத்தின் கீழ் சாட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சகல சிறப்புரிமைகளும் உரித்தாகும்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி,
எஸ். சி. மாணிக்கவாசகர்,
ஆணைக்குழுவின் காரியதரிசி.

வட. — கிழக்கு மாகாணங்களில் இருந்து தன்னிச்சையில்லாதவாறு அகற்றப்பட்ட, காணாமற் போயுள்ளவர்கள் பற்றி விசாரணை செய்யும் சனாதிபதி ஆணைக்குழு.

நீதி அமைச்சு,
உயர் நீதிமன்றக் கட்டிடம்,
கொழும்பு — 12.
[சி-414]

---

# ஓராண்டு நினைவஞ்சலி

''மறப்போமா பிறப்பிற்கெல்லாம்''

மலர்வு: 01 — 12 — 1932



மறைவு: 02 — 02 — 1994

## அமரர் சதாசிவம் கார்த்திகேசு

(உரிமையாளர் V. S. K. S. சுருட்டுக் கம்பனி)

எம் இனிய குலவிளக்காய் – எமைக்காத்த திருவிளக்காய்
மனைக்கொரு மணிவிளக்காய் – மானமுள்ள பெருவிளக்காய்
திருமகளின் தலைமகனாய் - சேர்ந்தமைந்த வைரவரின்
அருப்பணியில் தொண்டனாய் – அயலவர்க்கு நல்லவனாய்
பெரும் பணிகள் ஆற்றி நின்ற பெரியவரே! சென்றீரே!
ஒரு மனதாய் உங்களை நாம் ஓராண்டாய்த் தேடுகின்றோம்.

நீங்காத் துயரால் நித்தம் தவிக்கும்;
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

''ஜெயாபோட்டோ''
9/12, திருமகள் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். [34790]

---

3ஆம் ஆண்டு

# நினைவலைகள்



அமரர்

## பொன்னையா இராமுப்பிள்ளை

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

நெஞ்சம் குளிர: 12 — 07 — 1935
நெஞ்சம்வேக: 26 — 01 — 1992

திதி: 23 — 01 — 1995

ஆருயிர் தெய்வமே! அன்பின் அப்பாவே! உங்கள் அன்பிற்காக ஏங்கும் எங்களை இவ் இளவயதில் தவிக்க விட்டு எங்கே சென்றீர்கள்? அப்பா, நீங்கள் எங்களை விட்டு சென்று மூன்றாண்டு சென்றாலும் உங்கள் நினைவுகளை தினமும் சுமந்து பூஜிக்கின்றோம் நாங்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று புத்திமதி கூறுவீர்களோ அவ்வாறே வாழ்ந்து உங்கள் ஆத்மாவிற்கு சாந்தியளிப்போம். உங்கள் ஆசைகளை நிறைவேற்றுவோம்.

உங்கள் நினைவுகளை பூஜித்து வாழும்
—குடும்பத்தினர்.

''அம்பிகை வாசா''
கைதடி கிழக்கு,
கைதடி. (34758)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
202/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## நேர்மையான வழி தேவை

மெத்தப் பெரிய கஷ்டப்பட்டு, மேலும் எட்டுப் பொருள்கள்மீதான தடையை அரசாங்கம் நீக்கியிருக்கிறது!

புதிய அரசாங்கம் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் பதவிக்கு வந்ததும், எவரும் கேட்காமலே, தானாகவே, நல்லெண்ணம் என்ற பேரில் மேற்கொண்ட முதலாவது பொருளாதாரத்தடைத் தளர்வுக்கும் —

இப்போது, ஐந்து மாதங்களின் பின்னர், இரண்டாவது தடவையாக அறிவித்த தடைத் தளர்வுக்கும் — இடையில் பல வேறுபாடுகள், வித்தியாசங்கள் உள்ளன!

வட பகுதித் தமிழ் மக்கள் மீது முந்திய அரசாங்கம் விதித்த பொருளாதாரத் தடையால் அவர்கள் படும் கஷ்டங்களை புதிய அரசாங்கத்தில் உள்ளவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். நல்லெண்ணத்தின் பேரில் முதல் தடவையிலேயே தடையை முற்றாக நீக்கியிருக்கலாம். வேண்டுமானால் போருக்குப் பாவிக்கப்படுவதாகக் கருதப்படும் ஒரு சில பொருள்களை தவிர்த்திருக்கலாம்.

ஆழம் அறியாமல் காலை விடுவதோ என்ற எண்ணத்துடன், அரசு அப்போது 28 பொருள்கள் மீதான தடையை மட்டுமே நீக்கியது; பொருளாதாரத் தடையை அரைக்கரைவாசியே தளர்த்தியது!

ஐந்து மாத இடைவெளியின் பின்னர் ஆக எட்டுப் பொருள்கள் மீதான தடையை நீக்குவதற்கே அரசுக்கு மனம் வந்திருக்கிறது! எதையும் ஒரே முறையில் செய்தால் மவுசும், மதிப்பும் குறைந்து விடும் என்று அரசு நினைக்கிறதோ!

பொருளாதாரத் தடை தமிழ் மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை என்பதனைப் புரிந்துகொள்ளாமல், அரசாங்கம் இவ்வாறு விளையாட்டுத்தனமாக, விருப்பம் இல்லாமல் செயற்படுவது அதன் எதிர்கால நடவடிக்கைகளில் பெரும் அவநம்பிக்கையை உருவாக்குகிறது!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சின்போது, போருடன் சம்பந்தப்பட்ட பொருள்கள் தவிர்ந்த ஏனையவற்றின் மீதான தடையை நீக்குவது குறித்து இணக்கம் தெரிவித்த அரசாங்கம்—

சரியாக ஒரு வாரத்தில் தலைகீழாக மாறி, எரிபொருள்களையும் தவிர்த்து எட்டுப் பொருள்கள் மீதான தடையை நீக்கியிருப்பது தமிழர்களை ஏமாளிகள் ஆக்குவது மட்டுமன்றி, அவர்களை மூன்றாம் தரத்தினர் ஆக்குவதுமாகும்.

தமிழர்கள் ஒன்றும் அரசாங்கத்திடம் இரந்து நிற்கவில்லை. அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடும் கௌரவமுள்ள மக்கள் என்பதனை அரசு மறந்துவிடக்கூடாது.

தமிழர் விடயத்தில் வெறும் வாய்ப்பந்தல் போட்டு அவர்களை ஏமாற்றிய காலம் மலையேறிவிட்டது என்பதனை சந்திரிகாவும் அவரின் அரசாங்கத்தினரும், அதிகாரிகளும் முதலில் புரிந்துகொள்வது அவசியம். தெற்கின் புதிய தலைமுறை, தங்களைச் சரியாக உணர்ந்துகொண்டிருக்கும் என்றே தமிழர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பொருளாதாரத் தடையை நீக்குதல், போக்குவரத்துப் பாதையை திறத்தல், புனர்வாழ்வு — புனர்நிர்மாணப் பணிகளைச் செய்தல் ஆகிய சிறிய விடயங்களிலேயே அரசு தனது ''அருக்காணி''த் தனத்தையும், காலம் கடத்தும் உத்தியையும் கையாண்டால் —

மிகப்பெரிய விவகாரமான அரசியல் தீர்வு சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் கயமை மயக்கம் கொள்ளாதிருக்கும் என்று தமிழர்கள் எப்படி நம்புவது?

தமிழர்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதிலோ உரிமைகளை வழங்குவதிலோ கச்சப்புச்சு அணுகுமுறையை அவர்கள் விரும்பவில்லை. நேர்மையான, நீர்மையான வழியில்அரசு தங்கள் உரிமைகளை வழங்க வேண்டும் என்றே எதிர்பார்க்கிறார்கள்.

இதனை புதிய யுகம் காண விரும்பும் சந்திரிகா தமது மனதில் ஆழமாகப் பதித்துக் கொள்ள வேண்டும்!

# யாழ்., கிளிநொச்சி பகுதிகளில் 82 பேருக்கு தொழுநோய்!

சண்டிலிப்பாய் ஜன. 23

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி 82 பேருக்கு புதிதாக தொழுநோய் ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக தொழுநோய் ஆய்வு நடத்தப்பட்டது.

இதன்படி மானிப்பாய் பிரிவில் 28 பேருக்கும் —

தெல்லிப்பளைப் பிரிவில் இரண்டு பேருக்கும் — பருத்தித்துறை பிரிவில் 10 பேருக்கும் —

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 14 பேருக்கும் —

கோப்பாய் பிரிவில் 7 பேருக்கும், சாவகச்சேரி பிரிவில் 8 பேருக்கும் —

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேருக்கும் புதிதாக தொழுநோய் தொற்றியுள்ளதாக யாழ்.பிராந்திய தொழுநோய் தடுப்பு அதிகாரி மு. குணரத்தினம் தெரிவித்தார்.

புதிதாக தொழுநோய் தொற்றியுள்ளவர்களுக்கு அந்தந்தப் பகுதிகளில் உள்ள தொழுநோய் சிகிச்சை அளிக்க ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஜ-135]

## தொழுநோய் தடுப்பு மருந்து எடுத்துவர நடவடிக்கை

யாழ். மாவட்டத்துக்கு இவ்வருடத்துக்குத் தேவையான தொழுநோய் தடுப்பு மருந்து வகைகளை விரைவில் கப்பல் மூலம் இங்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய தொழுநோய் தடுப்பு அதிகாரி டாக்டர் மு. குணரத்தினம் அண்மையில் கொழும்பில் உள்ள தொழுநோய் தடுப்பு தலைமை அலுவலகத்துக்குச் சென்று தொழுநோய் தடுப்பு மருந்துகளை இங்கு எடுத்து வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

தொழுநோயின் அவலங்களை சித்திரிக்கும் வீடியோ நாடாக்கள் மற்றும் உலக சுகாதார நிறுவனத்தால் வெளியிடப்பட்ட பெரிய அளவிலான விளக்கப்படங்கள், தமிழில் வெளியிடப்பட்ட தொழுநோய் பற்றிய கையேடுகள் என்பனவும் இங்கு எடுத்துவரப்படவுள்ளன. [ஜ-135]

## அரச ஊழியருக்கு ரூபா ஆயிரம் முற்பணம்

நவாலி, ஜன. 23

அரச உத்தியோகத்தர்கள் இவ்வருடத்துக்கான ஆயிரம் ரூபா முற்பணத்தினை எதிர்வரும் பெப்ரவரி 28 ஆம் திகதிக்குள் பெற்றுக்கொள்ள முடியும்.

இது தொடர்பான சுற்றுநிருபம் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(ஜ-100)

தொடர்ந்தும் இயற்கையின் சீற்றம்:

# பூகம்பம் தாக்கிய மத்திய ஜப்பானில் பலத்த மழையால் மண்சரிவு ஆபத்து

டோக்கியோ, ஜன. 23

மத்திய ஜப்பானில் பூகம்பத்தினால் பேரழிவைச் சந்தித்த பகுதிகளில் தற்போது மண் சரிவு அபாயம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

அப்பகுதிகளில் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருவதால் மண்சரிவு ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

இதனால் ஏற்கனவே சேதமடைந்துள்ள கட்டடங்கள் இடிந்து விழக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இதற்கிடையில் பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டு தற்காலிக தங்குமிடங்களில் தஞ்சமடைந்துள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் புளு காய்ச்சல் பரவக்கூடிய சாத்தியங்கள் இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

மத்திய ஜப்பானை உலுக்கிய பெரும் பூகம்பத்தில் சிக்கி 5 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். (ஐ)

# பாப்பரசரின் இந்த விஜயத்தோடு எமக்கு பூரண அமைதி கிடைக்கும்

## யாழ். குரு முதல்வர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 23

''சமாதானத்தின் தூதுவனாகிய பாப்பரசரின் வருகையோடு ஆரம்பித்திருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் எமக்கு பூரண அமைதி கிடைக்கும் என்று நம்புகிறோம்.''

இவ்வாறு தெரிவித்தார் யாழ் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்திரு. எஸ். ஜே. இமானுவல். பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்தையொட்டி வண. யோசவ் வாஸ் நினைவு அஞ்சல் முத்திரை வெளியீட்டு வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இவ்வைபவத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

பாதை, பொருளாதாரம், போக்குவரத்துத் தடையால் பாப்பரசரின் விஜயத்தில் நாம் பங்கேற்க முடியவில்லை. நாம் இந்த நிலைமையை விளக்கி பாப்பரசருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பிவைத்திருந்தோம்.

அதில் இலங்கை விஜயத்தை பிற்போடுமாறும், விஜயம் மேற்கொண்டால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக யாழ்ப்பாணம் வருகை தருமாறும், பாதை திறப்பதற்கு முயற்சியை மேற்கொள்ளுமாறும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடங்குமாறு அரசைக் கேட்டுக்கொள்ளுமாறும் குறிப்பிட்டிருந்தோம் என்றார்.

முன்னதாக பாப்பரசரின் கொடியை முன்னாள் யாழ். ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஏற்றிவைத்தார். குத்துவிளக்கேற்றலுடன் ஆரம்பமான இவ்வைபவத்தில் யாழ். மரியன்னை பேராலயப் பங்குத்தந்தை அன்ரன் இராஜநாயகம் வரவேற்புரையாற்றினார்.

வண. யோசேவ் வாஸ் நினைவு அஞ்சல் முத்திரையை வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் திரு. எஸ். எம். சேதுகாவலர் வெளியிட்டு வைக்க, முன்னாள் யாழ். ஆயர் அதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அதைப் பெற்றுக்கொண்டார்.

இவ்வைபவத்தில் நல்லை ஆதின குருமுதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ப. திலகநாயகம் போல், யாழ். பிரதேச செயலர் திரு. க. குணராசா, யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு வே. பொ. பாலசிங்கம், யாழ். பிரதம தபாலதிபர் திரு. சு. கோடீஸ்வரன், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி செல்வி மேரிபேர்க்கின்ஸ் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். [க-4]

# சைவத்துக்கும் தமிழுக்கும் காப்பரண் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

## நல்லை ஆதீனமுதல்வர் பாராட்டு

''ஆறுமுகநாவலரின் பின்னர் நமது நாட்டிலே சைவத்தையும் தமிழையும் வளர்க்கவென இறைவனால் அருளப்பட்ட சிமாட்டி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி. தாம் பெற்ற செல்வத்தை மற்றவர்க்கு பகிர்ந்தளித்து அனைவரையும் வாழவைத்து சைவத்துக்கும் தமிழுக்கும் காப்பரணாக விளங்கும் அவர் எமக்கு கிடைத்துள்ள தேசிய சொத்து''

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் எழுபதாவது பிறந்தநாள் விழாவில் ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இவ்வாறு கூறினார்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேவஸ்தான நிர்வாகத்தின் ஏற்பாட்டில் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பக்குட்டியின் பிறந்தநாள் அறநிதிய சிறப்பு விழா கடந்த ஏழாம் திகதி மருதனாமடம் இராமநாதன் கல்லூரி அரங்கில் நடைபெற்றது.

பிறந்த நாளையொட்டி அன்றைய தினம் காலை முதல் மாலை வரை உரையரங்கு, பாராட்டு நிகழ்வுகள் நடைபெற்றன

இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்

ஆசிரியர் திரு ஆறு திருமுருகன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

உரையரங்கிற்கு தலைமை வகித்து உரையாற்றிய செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி —

தியானம், பஜனை, பூசைகளை செய்வதனால் மட்டும் நாம் இறைவனை அடைந்துவிட முடியாது. கஷ்டப்பட்ட ஏழை மக்களுக்கு அன்பும், ஆதரவும் காட்டி சேவை செய்வதன் மூலமே இறைவனை அடையமுடியும்.

தர்மத்தை கடைப்பிடித்தால் எமக்கு [illegible] வராது. அப்படி வந்தாலும் கூட அதனை தாங்கும் சக்தி எமக்குக் கிடைக்கும். எமது செல்வத்தை நல்ல வழிகளில் செலவிட வேண்டும். கோயில் பணியென கூறி அபரிமித செலவினை கேளிக்கைகளுக்காக செலவிடுவதை விடுத்து, அறப் பணிகளுக்கு அவற்றை பயன்படுத்த வேண்டும்.

எமது அறக்கொடை நிதியத்தின் மூலம் பலருக்கு உதவி வருகின்றோம்— எனக் கூறினார்.

சம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ், திரு சிவகுமாரன், ஆசிரியபயிற்சி விரிவுரையாளர் திரு. சிவ. மகாலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம் ஆகியோரும் உரையாற்றினர்.

பிறந்த நாளையொட்டி பல அன்பர்கள், பக்தர்கள், தங்கம்மா அப்பாக்குட்டிக்கு மலர்மாலைகள் சூட்டி பரிசில்கள் வழங்கினர்.

பல இசைக் கலைஞர்கள் பேச்சாளர்கள், அறிஞர்கள் [illegible] பொன்னாடை போர்த்தி, பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புலிகளின் குரல் வானொலியில்

23 — 01 — 1995
திங்கள் இரவு

- ★ 8-01 — தளிர்கள்— சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
- ★ 8-20 எங்களின் தேசம்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தரிசனம்-யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ. சண்முகதாஸுடனான செவ்வி
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

24 — 01 — 1995
செவ்வாய் காலை

- ★ 7-03 — மாவீர வணக்கம்
- ★ 7-15 — இன்றைய தாரகை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 — தாயகப்பாடல்கள்
- ★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

## தமிழீழ வானொலி

ஒலிபரப்பு
திங்கள் மாலை

- ★ 5-01 — சிந்தனைச் சிதறல்
- ★ 5-02 — எழுச்சிக்கீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15— ஆழியமுதம்
- ★ 5-30 — மாணவர்பக்கம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
- ★ 6-02 —நேயர் நெஞ்சம்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 —என் தெரிவு

## மாணவனுக்கு பாராட்டு

சண்டிலிப்பாய், ஜன. 23

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் 183 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப்பெற்றுக்கொண்ட பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாலய மாணவன் செல்வன் சி. உமைபாலனுக்கு பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினால் அண்மையில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

வித்தியாலய அதிபர் ஸ்ரீ விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக சங்கானை கல்விக்கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் கலந்துகொண்டு மேற்படி மாணவரையும் ஆசிரியர்களையும் பாராட்டியுரை நிகழ்த்தினர். ஆசிரியர் எஸ். மனோகரன் உட்பட மற்றும் பலர் பாராட்டுரை நிகழ்த்தினார்கள். (க-135)

## பேராசிரியர் துரைராசா நினைவுக் குழு

பேராசிரியர் துரைராசா நினைவுக்குழு ஒன்று கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளது.

றியர் அட்மிரல் கே. ஆர். எல். பெரேராவைத் தலைவராகவும் திரு. எம். எஸ். பேர்னாண்டோவைச் செயலாளராகவும் கொண்ட இக்குழுவின் பொதுக்கூட்டம் கடந்த 8ஆம் திகதி கொழும்பு — 7 இல் உள்ள பொறியியலாளர் நிறுவனத்தில் நடைபெற்றது.

இக்குழு பேராசிரியர் துரைராசா நினைவாகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. (க)

## ஆலயங்களில்

நல்லூர் சட்டநாதர் வீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ கொண்டலடி வைரவசுவாமி கோயிலில் நாளை செவ்வாய்க்கிழமை பகல் 10 மணிக்கு 1008 சங்குகளால் வருடாந்த விசேஷ அபிசேகமும் மாலையில் சுவாமி தெருவீதி உலாவருதலும் நடைபெறும். (க)

## சைவசமய பரீட்சை

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை 1995 பெப்ரவரி 12 ஆம் திகதியும் 14 ஆம் திகதியும் நடைபெறும்.

ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 13 வரையான மாணவர்களுக்கு நடத்தப்படும் இப் பரீட்சையின் விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 25 ஆம் திகதி ஆகும்.

பரிசு வழங்கல் பெப்ரவரி 27 ஆம் திகதி மகாசிவராத்திரி தினத்தன்று நடைபெறும். (க-161)

# நிஜமான சமாதானம் இத்தீவில் மலரும்!

## பாப்பரசர் கூறிய பிரியாவிடை ஆசி

கொழும்பு. ஜன. 23

''நிஜமான சமாதானம் இத் தீவில் மலரும்'' (True Peace will Blossom in this Island)

கொழும்புக்கான தமது 24 மணிநேர விஜயத்தை முடித்துக் கொண்டு றோம் புறப்பட்ட பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து பிரியாவிடை ஆசியில் முன்கண்டவாறு கூறினார். (ஐ-க)

# நிரந்தர சமாதானம் பற்றி கொழும்பில் ஆய்வரங்கு!

கொழும்பு, ஜன. 23

இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு காண்பதன் மூலமாக நிலையான சமாதானத்தை உத்தரவாதம் செய்வதற்கான ஆய்வரங்கு ஒன்று இன்றுமாலை 5மணிக்கு கொள்ளுப்பிட்டியில் உள்ள சொசக்காவா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தகவல், சுற்றுலா விமானப் போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா அதில் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார்.

பத்திரிகையாளர்கள் எழுத்தாளர்கள், கல்விமான்கள் மற்றும் பிரமுகர்கள் அதில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

# தனியாரின் பாவனையில் மக்கள் வங்கி வாகனங்கள்!

கொழும்பு, ஜன. 23

கடந்த காலங்களில் மக்கள் வங்கிக்குச் சொந்தமான சுமார் 300 வாகனங்கள் — அவற்றில் உள்ள இலச்சினைகள் அழிக்கப்பட்ட பின் — தனியார் சிலரின் சொந்தத் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டு வந்தது தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி தனிப்பட்ட முறையில் பயன்படுத்தப்பட்டு வந்த அந்த வாகனங்களை மீளப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மக்கள் வங்கியின் தலைவர் கலாநிதி காமினி பெர்னாண்டோ தெரிவித்தார்.

அந்த வாகனங்களில் மீண்டும் மக்கள் வங்கி இலச்சினை பொறிக்கப்பட்டது. (ஐ-10)

# பாடசாலைகள் தோறும் நூலகம் அமைக்கத் திட்டம்

வலிகாமம் தெற்கு, ஜன. 23

அரசாங்க பாடசாலைகளில் மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கவும், அறிவைப் பெருக்கிக்கொள்ளவும் வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக இவ்வருடம் நூலகங்கள் அமைக்கவும் அவற்றை பராமரிக்கவும் கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது.

தொண்டர் நிறுவனங்களின் உதவியுடன் பாடசாலை நூலகத் திட்டத்தை செயற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

பத்தாயிரத்துக்கும் கூடுதலாக உள்ள பாடசாலைகளில் இதுவரை சுமார் மூவாயிரம் பாடசாலைகளிலேயே நூலக வசதிகள் காணப்படுவதாகவும் —

ஏனைய பாடசாலைகளுக்கும் இவ்வருடம் நூலக வசதிகள் விஸ்தரிக்க கல்வித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிய வருகின்றது. (ஜ-152)

## தொழுநோய் ஆய்வு

சண்டிலிப்பாய், ஜன. 23

குடத்தனை இராஜன் நகர் அகதிமுகாமில் சுகாதார பரிசோதனையும், தொழுநோய் ஆய்வும் இன்று திங்கட்கிழமை முற்பகல் பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நடத்தப்படவுள்ளது. யாழ். தொழுநோய் தடுப்பு அதிகாரி டாக்டர் மு. குணரத்தினம் இதில் கலந்து கொள்வார். (ஜ-135)

பாப்பரசர் விஜயத்தின் போது

# சீர்மாறன் தலைமையில் மருத்துவக் குழு சேவை!

கொழும்பு, ஜன 23

கொழும்பு காலி முகத்திடலில் பாப்பரசர் பங்கு பற்றிய நிகழ்ச்சியில் பல்லாயிரக்கணக்கில் திரண்டிருந்த மக்களுக்கு அவசர மருத்துவ சேவைகளை வழங்குவதற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மருத்துவ அதிகாரிகள் குழுவுக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த டாக்டர் எஸ். பி. ஆர். சீர்மாறன் தலைமை வகித்தார்.

அவர் தலைமையிலான மருத்துவ அதிகாரிகள் குழுவில் கொழும்பு விபத்துப் பிரிவைச் சேர்ந்த டாக்டர்களான என் எம் ஏ.பெரேரா, டாக்டர் எஸ். செல்வரெட்ணம், டாக்டர் ராஜேந்திரா, டாக்டர் பி. ரி. குணசேகரா, டாக்டர் பி ஏ. கோதாகொட ஆகியோர் அடங்கியிருந்ததாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது. (உ)

## அரச ஊழியருக்கு இழப்பீட்டு நஷ்ட ஈடு

கொழும்பு.ஜன 23

இழப்பீட்டுக்காக விண்ணப்பித்திருந்த — மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த —சகல அரச ஊழியர்களுக்கும், எதிர்வரும் முசலாம் திகதி புதன்கிழமை வவுனியா அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து இழப்பீட்டுக்கான காசோலைகள் வழங்கப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு துறைமுகங்கள், கப்பல் துறை, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம். எச் எம். அஷ்ரப் இவ்வாறு உத்தரவிட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## வீட்டுக்குள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும் —

அதிகாலை வேளை படையினர் யானையைச் சுட்டுக் கொன்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது

இச்சம்பவத்தில் படுகாயங்களுக்கு உள்ளான ஒருவர் கண்டி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தம்பலகாமம் பூநகரி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை — அண்மையில் திருகோணமலை மூதூரில் காட்டுப பகுதிக்கு தேன் எடுக்கச் சென்ற எட்டுப் பேரை யானை ஒன்று தாக்கியதில் நால்வர் உயிரிழந்ததும் —

ஏனைய நால்வரும் காயமடைந்ததும் தெரிந்ததே.

## வடபகுதிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் அங்கிருந்து கன்னாகத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சியில் இந்த வேலைகளை மேற்கொள்வதற்காக நூறு தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பெற்றோல், மண்எண்ணை உட்பட மின்கோபுரம் அமைப்பதற்குத் தேவையான 51 பொருள்களை தாண்டிக்குளம் ஊடாக அனுப்புவதற்கு அனுமதிக்குமாறு இலங்கை மின்சார சபையின் தலைவர் பாதுகாப்பு அமைச்சைக் கேட்டுள்ளார்

மின் விநியோகப் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பது தொடர்பாக கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ் தில்லைநடராசா பாதுகாப்பு இணைப்பதிகாரியை நேற்று முன்தினம் சந்தித்து மிக முக்கிய பேச்சு நடத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது (அ-ஐ)

# மரண அறிவித்தல்கள்

## வேதநாயகம் போல் (J. P.)

மாகியம்பதியைச் சேர்ந்த வேதநாயகம் போல் (J. P.) அவர்கள் கர்த்தரின் மகிமைக்குள் பிரவேசித்துள்ளார்.

அன்னார் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், மாகியம்பதியை வசிப்பிடமாகவும் கொண்டவரும், காலஞ்சென்ற செல்வமணியின் அன்புக் கணவரும், திருமதி மலர் பெஞ்சமின், டிக்சன் ஜெயபாலன் (மட்டக்களப்பு), சார்ள்ஸ் குணசீலன் (திருகோணமலை), ஆர்தர் செல்வநாயகம் (ஆசிரியர், பண்டத்தரிப்பு), ஜேம்ஸ் ஆரியரட்ன (காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை முன்னாள் ஊழியரும், யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய ஆசிரியரும்), பீற்றர் தனராசசிங்க (பொறியியலாளர், வவுனியா) ஆகியோரின் அன்புத் தகப்பனும், பெஞ்சமின், கிறேஸ், றொஷானி, ஜெயக்குமாரி ஆகியோரின் அருமை மாமனாரும், திருமதி ஜேகமலர் அந்தோனிப்பிள்ளையின் மைத்துனரும், திரு. அந்தோனிப்பிள்ளையின் சகலனும், இளங்கோ, மதியழகன் (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் பெரிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இலங்கைப் பெந்தேகொஸ்த்து சபையினரால் இன்று (23-01-95) பிற்பகல் 3-00 மணியளவில் மாகியம்பதியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடத்தப்படும். இத் தகவலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜேம்ஸ் ஆரியரட்ன
[மகன்]

மாகியம்பதி,
சண்டிலிப்பாய்.

[34815]

## அரியரட்ணம் மேரி மக்டலீன் மலர்

நெல்லியடி கரவெட்டி மேற்கைச் சேர்ந்த அரியரட்ணம் மேரிமக்டலீன் மலர் 21-01-95 காலமானார். இவர் காலஞ்சென்ற அரியரட்ணத்தின் அன்பு மனைவியும், டஸ்ரியாம்பிள்ளை பிரகாசம் தம்பதிகளின் அன்பு மகளும், செல்வராணி, சுபேந்திரன் (ஆசிரியை புனித பத்திரிசியார் கல்லூரி தலாவாக்கொல்லை), டொறின் மன்மதநாயகம் (ஆசிரியை யா/விக்கினேஸ்வராக் கல்லூரி / நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ஆபிரகாம் லிங்கன் (கனடா), காலஞ்சென்ற ஜோசவ் கனகராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், ம. சுபேந்திரன், ம.மன்மதநாயகம் (மன்னண்ணா), அமலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், இராஜேஸ்வரி பொன்னுத்துரை (சுவிஸ்), அருட்சகோதரி தார்சில்லா (திருக்குடும்பக் கன்னியர் மடம் பருத்தித்துறை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகரட்ணம் ஜோசவ் (கொழும்பு), தங்கரட்ணம் கனகராயர் (கொழும்பு), அருட்சகோதரி ஓமுனா (திருக்குடும்பக் கன்னியர் மடம் வவுனியா), யோகரட்ணம் மரியாம்பிள்ளை (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சாரு, கசல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23-01-95 இன்று பிற்பகல் 3-00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக குடும்ப சேமக்காலைக்கு கொண்டு செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மன்னண்ணா
(மருமகன்)

தபாற்கந்தோரடி,
நெல்லியடி,
கரவெட்டி.

[34811]

## திருமதி
## நாகரெத்தினம் இராசலட்சுமி
## (செல்வி)
(நயினாதீவு)

நயினாதீவு 1ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நா. இராசலட்சுமி 21-01-95 சனிக்கிழமை நயினாதீவில் காலமானார். இவர் நாகரெத்தினத்தின் (செட்டி) அன்பு மனைவியும், கந்தையா - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், குறிகட்டுவான் சரவணமுத்து - நாகமுத்து தம்பதிகளின் மருமகளும், பிரியா, தீபன், பிரதீபா ஆகியோரின் அன்புத் தாயாரும், கெங்கா, ரஞ்சன், ரதி ஆகியோரின் அன்பு சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நயினையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
திருமதி அ. இராசமலர்.
(மைத்துனி)

பிரியா ஸ்ரோர்ஸ்,
ஆஸ்பத்திரி முன்பாக,
கே. கே. எஸ் வீதி,
இணுவில்

(34818)

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

சரவணை மேற்கு, வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முன்னாள் எல்ப்பிட்டி வர்த்தகருமாகிய சின்னத்தம்பி சுப்பிரமணியம் அவர்கள் நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும், தங்கம்மா, பொன்னம்மா, காலஞ்சென்றவர்களான தம்பையா, சின்னத்துரை, பொன்னாச்சி, ஆச்சிமுத்து ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், இளையபிள்ளை, திருமேனிபபிள்ளை ஆகியோரின் மைத்துனரும், பசுபதிப்பிள்ளை [இந்தியா], பத்மநாதன் (கனடா), தில்லைநாதன் (தம்பிரான் - வர்த்தகர்), சந்திரசேகரன் [குவைத்], சோதிலட்சுமி (கனடா), லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயராணி [இந்தியா], சற்குணதேவி, உலகேஸ்வரி, சியாமளா (கனடா), முருகையா (கனடா), நவநேசன் (ஆசிரியர் - வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் 586, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (கனகரத்தினம் ம.ம வி. முன்பாக) இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 1 மணிக்கு கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. நவநேசன்
(மருமகன்)

586, நாவலர் வீதி,
(கனகரத்தினம் ம.ம. வித்தியாலயம் முன்பாக).

(34824)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 23 - 01 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

## லொறியைக் கலைத்து...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பவர் காயமுற்றார்.

சம்பந்தப்பட்டோர் சென்ற லொறியை 13 ஆவது மைல் கல்லில் மறித்த — புளொட் உறுப்பினர்கள் எனச் சந்தேகிக்கப்படும் — ஒரு குழுவினர் லொறியை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் —

துப்பாக்கிச் சூட்டையும் மீறி லொறிச்சாரதி லொறியை ஓட்டிச்சென்றார் என்றும் —

எனினும் வேறு ஒரு வாகனத்தில் கலைத்துச் சென்ற ''புளொட்'' குழுவினர் 10 ஆவது மைல் கல்லில் வைத்து மூவரையும் சுட்டுக் கொன்றதுடன் மற்றொரு தமிழரைக் காயப்படுத்தினர் என்றும் —

பாதுகாப்பு உயர் வட்டாரங்களிலிருந்து தெரியவந்தது

இச்சம்பவம் தொடர்பாக ரி-81 ரக துப்பாக்கி ஒன்றை பொலீஸார் மீட்டுள்ளனர் என்றும் —

இச்சம்பவத்தில் ரி-81 ரகத் துப்பாக்கிகள் இரண்டு பயன்படுத்தப்பட்டு, தாக்குதல் நடத்தப்பட்டதாக நம்பகரமாகத் தெரியவருகின்றது.

கொலையாளிகள் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பிவிட்டனர்.

கொலையாளிகளான ''புளொட்'' உறுப்பினர்களைக் கைது செய்வதற்காக வவுனியாவில் உள்ள இராணுவத்தினரின் உதவியை புத்தளம் பொலீஸார் நாடியுள்ளனர்.

— இவ்வாறு 'த ஐலண்ட்' பத்திரிகை தகவல் வெளியிட்டது. (உ-3)

## யாழ்பல்கலை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
திருக்கிறது.

திருவாளர்கள் ஏ. சோமசுந்தரம்பிள்ளை, கே. தேவசிகாமணி, ஆர். சுந்தரலிங்கம், எஸ். ஸ்ரீபாஸ்கரன், ஏ. முத்துக்கிருஷ்ணன், எஸ். ஜெயரத்தினம் ஆகியோரும் வண. எஸ். ஜெபநேசன், டாக்டர் எம். கணேசரத்தினம் ஆகியோரும் யாழ். பல்கலைக்கழக பேரவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

(உ-3)

யாழ். றோட்டறிக் கழகம்
நடத்தும்
சர்வதேச றோட்டறியின்

# 90 ஆம் ஆண்டு நிறைவு
# தமிழ்/ஆங்கிலப்
# பேச்சுப் போட்டி

சர்வதேச றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில பேச்சுப் போட்டிகளை எமது யாழ். றோட்டறிக் கழகம் நடத்தவுள்ளது.

**தலைப்புகள்:**

தமிழ்

1. மற்றவர்களுக்காகவும் வாழ்வோம்
2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு
3. தமிழிலக்கியங்களில் ஏலவே பொதிந்துள்ள றோட்டறியின் நோக்கங்கள்

ஆங்கிலம்

1. Live, Let Live,
2. Unity is Strength
3. Need for International Friendship

**போட்டி விதிகள்:**

14 முதல் 18 வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

கீழே காட்டப்பட்ட மாதிரியில் அமைக்கப்பட்ட விண்ணப்பத்தை தயாரித்து உரியவாறு பூர்த்திசெய்து தாம் பயிலும் பாடசாலையின் அதிபர் அல்லது உப அதிபரைக் கொண்டு உறுதிப் படுத்தி, கீழ்க்கண்ட முகவரிக்கு இம் மாதம் 31 ஆம் திகதிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேற்புறத்தில் ''சர்வதேச றோட்டறியின் 90 ஆம் ஆண்டு நிறைவு பேச்சுப் போட்டி'' / ''Oratorical Contest for the 90th Anniversary of Rotary International'' எனக் குறிப்பிடப்பட வேண்டும்.

பேச்சுக்கான நேரம் 5 முதல் 7 நிமிடங்களாகும்.

தமிழ், ஆங்கிலப் பேச்சுப் போட்டிகளில் தனித்தனியே முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கான தங்கப்பதக்கப் பரிசில்கள் 90 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.

போட்டி முடிவுகள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்,

## மாதிரி விண்ணப்பப் படிவம்

சர்வதேச றோட்டறியின்
90ஆம் ஆண்டு நிறைவு பேச்சுப் போட்டி

முழுப் பெயர்: ............................
பிறந்த திகதி: .................. பால்: ..........
பாடசாலை: .................. தரம்: ..........
வதிவிட முகவரி: ............................
பேச்சுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் மொழி: ..........

............................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

**உறுதிப்படுத்துதல்:**

இவ்விண்ணப்பதாரியினால் மேலே தரப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையானவை என உறுதி செய்கிறேன்.

.................. ..................
கையொப்பம் திகதி

அதிபர் / உப அதிபர்
..................
..................

தலைவர்,
யாழ். றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(கி-120)

# சமாதானம் பேசப்படும் இவ்வேளை ஏமாற்றப்படாதிருக்க விழிப்புத் தேவை

## இமானுவேல் அடிகள் எச்சரிக்கிறார்

யாழ்ப்பாணம், ஜன. 23

போர்க் காலத்திலே நாங்கள் விழிப்பாக இருந்தது போல, சமாதானம் என்று கூறப்படும் இவ்வேளையிலும் நாங்கள் மிக விழிப்பாக இருக்கவேண்டும். சமாதானம் என்று கூறி நாங்கள் ஏமாற்றப்படக்கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். ஆயர் இல்லக் குரு முதல்வர் அருட் கலாநிதி எஸ். ஜே. இமானுவேல் அடிகளார்.

பொம்மைவெளி சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காவின் 2 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இச்சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா நிர்வாகி திரு. எ. பிரான்சிஸ் தலைமையில் நேற்று மாலை நடைபெற்ற நிறைவு விழாவில் அடிகளார் மேலும் கூறியதாது:

இரண்டு விதமான ஏமாற்றங்கள் எங்களை எதிர் நோக்கி நிற்கின்றன. பெரும்பான்மை மக்கள் எங்களை மிரட்டும் பாணியில் எங்களுடைய கழுத்திலேயே பிடித்துக்கொண்டு, எங்களிடமிருந்து வாக்கு வாங்க இருக்கிறார்கள் அதாவது மனித உரிமைகளான பொருள்களையும், வழிகளையும் எங்களுக்குத் திறக்காது இறுக பிடித்துக்கொண்டு எங்களுடன் பேச முனைவது ஒன்று.

இரண்டாவது, சிறுவர்களுக்கு நாங்கள் ''சொக்கிளேற் கொடுத்து அவர்களை அழைப்பதுபோல எங்களுக்கு சிலசில பண்டங்களைக் கொடுத்து எங்களை வாங்க எத்தனிக்கின்றார்கள்.

கடந்த கால சரித்திரங்கள் எங்களுக்கு எத்தனையோ உண்மைகளை கற்பித்திருக்கின்றன அதன் காரணமாக போர்க்காலத்திலும் பார்க்க, இன்று நாங்கள் கூடிய விழிப்பாக செயல்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தச் சிறுவர்கள் இந்த விழாவை எடுக்கும் போது வளர்ந்தவர்களாகிய நாங்கள் கற்க வேண்டிய பாடங்களாகிய நாட்டுப்பற்று, தேசப்பற்று இவைகளை எங்கள் குடும்பங்களிடையேயும் பாடசாலைகளிலும் புகுத்தவும் நாங்கள் விழிப்பாக இருக்க வேண்டும் — என்று தெரிவித்தார்.

### உளப் போசாக்கு

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் தமது சிறப்புரையில் தெரிவித்ததாவது:

பிள்ளைகளின் உணவில் மட்டும் போசாக்கு இருந்தால் போதாது; உளப் போசாக்கும் தேவை. அவர்களின் உள்ளத்தில் தேங்கியிருக்கும் சிந்தனைகளுக்கு ஏற்றமாதிரி அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும். அதற்கு ஏற்றால் போல் இச் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

பெற்றோர் பிள்ளைகளை இப்பூங்காவில் சேர்ப்பதோடு மட்டும் நின்றுவிடாது, அவர்களின் வளர்ச்சியிலும் அக்கறை காட்ட வேண்டும். ஆறு வயதில் அவர்களுக்கு நாங்கள் கொடுக்கும் விதைதான் அவர்களைப் பெரிய விருட்சமாக வளர வைக்கப் போகிறது.

விடுதலைப் புலிகள் இதையறிந்து தான் சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்காக்களை அமைத்து சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். வசதிகளுடன் கூடிய இப்பூங்காவானது யாழ்ப்பாணத்தில் இருப்பது பெருமையை தரக்கூடிய தொன்றாகும் — என்றார்.

முன்னதாக, பூங்காவைச் சேர்ந்த சிறுவர்கள் பான்ட் வாத்திய இசையுடன் விருந்தினர்களை மேடைக்கு அழைத்து வந்தனர். தேசியக் கொடியை வலிகாமம் கோட்ட பொறுப்பாளர் திரு. ந. வெள்ளை ஏற்றி வைத்தார். பூங்கா கொடியை யாழ். மாவட்ட சிறுவர் பாதுகாப்புத் திட்ட பொறுப்பாளர் திரு. குட்டியும், பொம்மைவெளி சிறுவர் போசாக்கு பராமரிப்பு பூங்கா கொடியை வலிகாமம் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. திருக்குமரனும் ஏற்றி வைத்தனர்.

மங்கள விளக்கை காந்தரூபன் அறிவுச்சோலை பொறுப்பாளர் திரு. றமேஸ் அப்பா, செஞ்சோலைப் பொறுப்பாளர் செல்வி ஜனனி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

பூங்கா சிறுவர்களின் தமிழ்த்தாய் வாழ்த்து வரவேற்பு பாடல் போன்ற நிகழ்ச்சிகளுடன் ஆரம்பமான இவ்விழாவில் ஆசிரியை திருமதி. சி.வசந்தமலர் யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை தலைவர் பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன், யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி. தணிகைச்செல்வி, யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. கு. சிறில், வைத்திய கலாநிதி ரி. டபிள்யூ. ஜெயகுலராஜா, ஆசிரியை செல்வி. ப. கோமதி, யாழ். வட்டப் பொறுப்பாளர் திரு. பொ. செந்தமிழன் ஆகியோரும் உரையாற்றினர்.

இரண்டாவது ஆண்டு சிறப்பு மலரும் விழாவில் வெளியிடப்பட்டது.

[அ-4]

## அவசரப்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
குறித்தும் —

அகதி முகாம்களை புனரமைப்பது குறித்தும் — குழுவினர் ஆராய்ந்தனர்.

சீநோர் நிறுவனம், யாழ். ஆஸ்பத்திரி மற்றும் வடமராட்சி, தென்மராட்சி பகுதி அகதி முகாம்களையும் பார்வையிட்டனர்.

யாழ், மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் மேற்கொள்ள வேண்டிய உடனடி புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்து இவர்கள் ஆராய்ந்து புனர்வாழ்வு அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவிருப்பது தெரிந்ததே.

(உ-3)

## 'வாரண்ட்' வழங்க சிக்கல்

கொழும்பு, ஜன. 23

பற்றரி, கற்பூரம், மருந்துகள் போன்ற தடைவிதிக்கப்பட்ட பொருள்களை வடபகுதிக்குக் கொண்டு செல்ல முயன்றமைக்காக கைதாகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்ட 18 பேருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்ப முடியாதிருப்பதாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா நீதிமன்றத்தினால் பிணையில விடுவிக்கப்பட்ட இந்த 18 பேரும் பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் வசிப்பதால், அவர்களுக்கு அழைப்பாணையை கையளிக்க முடியாமல் இருப்பதாக வவுனியா பொலீஸாரால் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி 18 பேருக்கும் எதிராக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி இ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் கடந்த செவ்வாயன்று எடுக்கப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

வழக்கு அடுத்த மாதம் 17 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டது.

சூசை தேவநாயகம், அருளப்பு மோகன்தாஸ், கருணாநிதி சகாயநிதி, கந்தையா, சிவராஜா, ராஜரத்தினம், செல்வ ரவிந்திரராஜா, கணபதி குமாரசிங்கம், தர்மராஜா வரதராஜா தியாகராஜா, மகேஸ்வரி, சின்னவர் திருச்செல்வம், வீரண்ணன் விஜயன், செல்லப்பா சற்குணேஸ்வரன், நடராஜா, ரட்னராஜா என்ற ரமேஷ், முத்தையா அருள்ராஜா, சின்னத்துரை பாக்கியராஜா சின்னத்துரை பிரான்ஸிஸ் வெள்ளையன் குலமன்னர் ஆகியோர் மீதே இந்த வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. (உ)

# மரண அறிவித்தல்கள்

## பிலுப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை
(இளைப்பாறிய கத்தோலிக்க அச்சக அச்சுக் கோப்பாளர்)

பிலுப்புப்பிள்ளை கபிரியேல்பிள்ளை 22 - 01 - 95 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற றோசாவின் அன்புக் கணவரும், யேசுதாசன், மரியதாஸ், G. J. கிளறன்ரன் (ரஞ்சன் — போதகர் இரட்சிப்பின் சத்தம் கொழும்பு), றோகினி, கிறேஷியன் ஆகியோரின் அன்புத் தந்தையும், டாக்டர் அன்ரன் சந்தியாப்பிள்ளையின் மாமனாரும் ஆவார்.

மரணச் சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
டாக்டர் அன்ரன்

40 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்

(34821)

## சவிரிமுத்து ஆசீர்வாதம் போல்
## (S.A. Paul)

எஸ்.ஏ. போல் அவர்கள் 22-01-95 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

இவர் திரேசா போல் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகேந்திரா மற்றும் தெய்வேந்திரா, குலேந்திரா, பாலேந்திரா, அருட்திரு. ஜீவா போல் (அ.ம.தி.), றெஜினோல்ட், ஜோய், கஸ்ரன், றஞ்சித். அருட்செல்வன் எமில் போல் ஆகியோரின் அன்புத் தந்தையும், கொன்சி, ஜொய்சி, பாஸ்கரி, மீனா, சாந்தா, ஜீன், டிலானி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23 - 01 - 1995) திங்கட்கிழமை இவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு பிற்பகல் 4.15 மணியளவில் புனித மரியாள் பேராலயத்தில் இரங்கற் திருப்பலி நிறைவேற்றப்பட்டு பின்பு மரியன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி திரேசா போல்
(மனைவி)

51/1, பழையபூங்கா வீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(34823)

## செல்வி தம்பையா திலகவதி
[சிறுவர் பாடசாலை ஆசிரியை, சுன்னாகம்]

தெல்லிப்பழை, பன்னாலையை பிறப்பிடமாகக் கொண்டவரும், சங்கரத்தையை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய செல்வி தம்பையா திலகவதி காலமாகி விட்டார். இவர் காலஞ்சென்ற தம்பையா சம்பூரணத்தின் அன்பு மகளும், திருநாவுக்கரசு, சிவநாயகி, தேவநாயகி, குணநாயகி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற ஆறுமுகம், இராசையா, முருகையா ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று [23-1-95] காலை 10 மணியளவில் வழுக்கையாறு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் எற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. ஸ்ரீகந்தராசா
[பெறாமகன்]

ஏகாம்பரம் இராசையா,
துணைவி சந்தி,
சங்கரத்தை.

[34822]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org